கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—உசு.] விபவஹூ ஆனிமீ [பகுதி—அ.

Vol. XXVI. June-July-1928. No. 8.

## கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உகசு-ம் பக்கத்தொடர்ச்சி].

சூர்ப்பநகை சொன்னதைக்கேட்டு, இராமன், கடுஞ்சினங்கொண்டு "அதர்மயுத்தஞ் செய்யும் அரக்கரை இரக்கமின்றி அடியோ டழிக்கச் சங்கற்பஞ்செய் துகொண்டு இங்கு வந்திருக்கின்றேம். இன்னமும் கொடுஞ்சொற் கூறுவாயானால், கொன்றிடுவோம். இவ் வனத்தை விட்டு உடனே உயிர்தப்பி ஓடிப்போ" என்றான். அவள் "நான்முகன் முதலிய மூவாத தேவாதியர், எனக்கு மூத்த இராவணனுக்கு இறையிறுக்கும் குடிகளா யிருக்கின்றார்கள். ஆதலால், நீ கூறுவது உன் நன்மைக் கன்று. நான் உனக்குத் தனித்து உரைத்தற்குரிய உறுதியுரை ஒன்று உள்ளது. உன் நன்மையை உணரும் உணர்வுடையயானால், அதனை அறைகின்றேன், கேள். தசமுகனார் தாட்சணிய மற்றவர். உமது தங்கை மூக்கரியுண்டாளென்று மொழிவாரை நாக்கரியும் பழிகாரர். யாதொரு பிழையும் இழையாது உற்றதுரைப்பார் கதியே இதுவாயின் உங்கள்கதியை உரைக்கவேண்டுமோ? அவர் கோபம் உங்கள் உயிரோடும் ஒழியுமோ? ஒழியாது: உங்கள் உற்றுறுறவினராயுள்ளாருயிர்கள் ஒன்றும் ஒழியா தொழித்தே ஒழியும்! நீங்கள் என் முகத்தின் மூக்கரிந்தீர்ல்லீர், உங்கள் குலத்தின் முத

லரிந்தீர்கள். உங்கள் உயிர் உய்யுமாறு உண்டோ? இல்லை. நீங்கள் கொல்லப்படுவது திண்ணம். ஐயோ! உங்கள் அருமந்த அழகை அங்கணத்திற் கவிழ்த்த ஆரமுதம்போலப் பாழடையச்செய்துவிட் டீர்களே!''

"பூதலத்தும் பாதலத்தும் மீதலத்தும் உள்ள அரசர் முதலிய அனைவரும் அரக்கர்பெருமானுக்கு அஞ்சி நடுங்கி அடங்கி ஒடுங்கி யிருக்கின்றார்கள். அவர் சினந்தால், அவர்கள் தங்கள் தங்கள் தலைகளைத் தப்பவைப்பதே சாத்தியமன்று. அவர்கள் உங்களுக்கு அரணாதல் எங் ஙனம்? அவர்களை அடைக்கலம் அடைவதால் ஆவது யாவதுமில்லை. உங்களைக் காக்கவல்லார் வேறு ஒருவரும் இலர். யான் ஒருத்தியே உள்ளேன். என் உயிரை மன்மதன் போக்காமல் நீங்கள் காத்தால், உங்கள் உயிரை இராவணனார் நீக்காமல் நான் காப்பேன். அல்லாவிட் டால், எனக்குக் காலன் காமன். உங்களுக்கு இராவணனார் இருக் கின்றார்."

"கற்புடைமகளிர் தம்பெருமையைத் தாம் கூறார். ஆயினும், காதல் காரணமான கழிபோன்பால், என் பெருமையை யான் இயம்பு கின்றேன். இவள் அமரர் அனைவரினும் ஆற்றல் மிகுத்த அரக்கர் கோன் தங்கையாள். வல்லவர் எல்லவருக்கும் வல்லவளென்று இளையவ னுக்கு இசைப்பாயாக. அவன் அங்கபங்கஞ் செய்ய, யான் அடங்கி யிருந்தது, ஆற்றற்குறைவா லன்று, அன்பின்மிகுதியா லென்று அவனுக்கு அறிவிப்பாயாக. உங்களைப் போரிற் புறங்காப்பேன். வானிற் சுமந்து செல்வேன். இறைச்சிபோலும் இனிய கனிகள் எங்கிருந்தும் கொண்டுவந்து ஈவேன். வேறு எப்பொருள்வேண்டினும் அப்பொருளை அளிப்பேன். இவ்வளவு வன்மையுடைய என்னை வெறுத்து மென்மையுடைய இவளை விரும்புதலால் நன்மை யாது?''

"குடியின் மாண்பு, வடிவின் மேன்மை, மதியின் கூர்மை, இளமை யின் சீர்மை முதலான எந்தச் சிறப்பினும் என்னைப்போல இந்த உலகத்திலாயினும் வேறெந்த உலகத்திலாயினும் எவளேனும் இருக் கின்றாளென்று சொல்லவல்லாயேற் சொல்வாயாக."

"நீங்கள் என்னுடைய மூக்கினை நீக்கினீர்கள். இதனால் கெட்டது யாதும் இல்லை. இமைப்பொழுதில், அரிந்த மூக்கினைத் திரும்ப ஆக்குவேன். அம்மட்டோ, அரும்பெற லழகும் அமைத்துக்கொள்வேன். உங்கள் அருள்பெறும் அதிட்டம் ஒன்றுமட்டும் உடையேனானல், என்பெண்மைக்கு *எண்மை யாதொன்றும் இல்லை. ஆராய்ந்து பார்த்தால், முகத்துக்கு மேலாக உயர்ந்திருக்கிற மூக்கு மிகைதானே?"

"மனம் மாறுபட்டாரல்லரோ வாஞ்சிக்கப்படாதவர்? யான், உரு வேறுபட்டேனேயன்றி, உளம் வேறுபட்டிலேன். உம்பால் முன்போல் அன்பாயுள்ளேன். என்றன் இன்னுயிர் உந்தம் சொந்தமே. கண்டார் காதலிக்கும் கட்டழகு கொண்டார்க்குக் கூற்றுவனன்றோ? அந்நியர்க்கு அழகாகத்தோன்றாமல் அருவருப்பாயிருந்துகொண்டு உங்களுக்குப் பெருவிருப்பாயிருக்கும் திருவுருவைப் பெறுவேனானல், என்னை ஏற்றுக்கொள்ளீரோ?" என்றாள்.

### சூர்ப்பநகை இராமனை நோக்கி இலக்குமணன்போல மன்மதனும் உனக்கு இளையானோ? எனல்.

377\. சிவனும் மலர்த் திசைமுகனும் திருமாலும் தெறு குலிசத்
தவனும் அடுத் தொன்றாகி நின்றன்ன உருவோனே!
புவனம் அனைத் தையும் ஒருதன் பூங்கணையால் உயிர்வாங்கும்
அவனும் உனக் கிளையானோ? இவனேபோல் அருளிலனால்.

இ-ள். சிவனும் திசைமுகனும் திருமாலும் தேவேந்திரனும் சேர்ந்து ஒன்றாய் (ஓர் உருக் கொண்டுநின்றாற்போன்ற உருவமுடையோனே! எல்லா உலகங்களிலும் உள்ள (தேவர் நாகர் மக்கள் மாக்கள் முதலிய எல்லா) உயிர்களையும் மலரம்பினால் (மாணயாதனைபோலும் மதனவேதனை செய்து) கொல்வான்போல் வருத்துகின்ற அந்த மன்மதனும் உன் தம்பிதானோ? இந்த இளையோனைபோல (அவனும் என்பால்) இரக்கமில்லாதவனாயிருக்கின்றானே!

மலர்த்திசைமுகன்—(தாமரைப்) பூ (வில் வாழ்கின்ற, நான்கு) திசை (களையும் திசைக்கொன்றாக நோக்கிய நான்கு) முகத்தோன் (ஆன பிரமன்).

*எளிமை.

தெறு குலிசத்தவன்-(பகைவரை) அழிக்கின்ற வச்சிராயுதத்தையுடையன் (ஆன இந்திரன்). அடுத்து-சேர்ந்து. நின்றன்ன, நின்றாலன்ன என்பதன் விகாரம்; நின்றாற் போன்ற என்னும் பொருட்டு. புவனம்—உலகம்; ஆகுபெயராய்ப் புவனத்தில் உள்ள உயிர்களை உணர்த்தியது. ஒரு-ஒன்றான; இங்கே தனிமையான என்ற பொருள் குறிக்க நின்றது. ஒரு என்பதற்கு ஒப்பற்ற என்ற பொருளும் உண்டு. ஆல் ஈற்றசை. 'அருளிலனால்' என்பது 'அருளிலனாதலால்' என்னும் பொருளுடையது போலும்.

அநங்கன், அரிபிரமேந்திராதியரான, அகில உலகங்களினும் உள்ள அனைத்துயிர்களையும், வேறு துணை வீரர் யாருமின்றி ஒருதானே தனியனாய் வெல்லும் வல்லமை குறிக்க, 'ஒரு' என்ற அடையை உபயோகித்தாரென்றும், அதன்மேலும் அவன் வல்லமையை அதிசயம் விளைய உரைசெய்வாராய், வல்லவனுக்குப் புல்லும் ஆயுத மென்றவாறு, வன்மையான கூர்ங்கணைகள் வேண்டாது, மென்மையான 'பூங்கணையால்', (ஒரு போர்க்களம்போன்ற சுருங்கிய ஓரிடத்தன்றி விரிந்த புவனமனைத்தினும் உள்ளனவாய் ஒரு போர்ப்படைபோலன்றி இத்தனையென எண்ணவொண்ணாமல் வரையறைபற்றனவாயிருக்கின்ற) எல்லா உயிர்களையும் 'உயிர்வாங்கும் அவனும்' என்றா ரென்றும் உரைக்கலாம்.

"ஆலைக் கரும்பு சிலை; ஐங்கணை பூ; நாண் சுரும்பு
மாலைக் கிளி புரவி; மாருதம் தேர்;—வேலை
கடிமுரசம்; கங்குல் களிறு; குயில் காளம்;
கொடி மகரம்; திங்கள் குடை."

என, மன்மதன் போர்க்குதவும் பொருள்களெல்லாம் விலக்கின்றி மென்மையானவைகளாயினும், அவன் வன்மை யின்றெனினும் மென்மையுமில்லாத இன்மையான சூனியமேனியனாயினும், அவன், தனியனாய் உலகமுழுதும் வெல்லும் 'அசகாயசூரன்,' *'கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன்' என்றெடுத்துக்கூறி 'அவனும்' என்பதில் உள்ள உயர்வுசிறப்பும்மையில் அடங்கியுள்ள பொருளை விளங்கவைக்கலாம்.

---

* வாலி வதைப்படலம்-அக.

## சூர்ப்பநகை தன்னை அங்கபங்கம் செய்தது அன்பாலெனல்.

378 "பொன் உருவப் பொருகழலீர்! புழைகாண மூக்கரிவான்
பொருள்வே றுண்டோ?
'இன் உருவம் இதுகொண்டிங் கிருந்தொழியும் நம்மருங்கே;
ஏகாள் அப்பால்;
பின் இவளை அயல் ஒருவர் பாரார்' என் றே அரிந்தீர்;
பிழைசெய் தீரோ?
அன்னதனை அறிந்தன்றோ, அன்பிரட்டி பூண்டது நான்;
அறிவி லேனோ?"

இ-ள். "('இவள் உறுப்பைக் குறைத்துவிட்டால், பின்னும் நமக்கு) இனிதாயுள்ள இந்த (க்குறைபட்ட) உருவத்தோடு இங்கு நம்மிடத்தி லேயே யிருந்து தீர்வாள்; அப்புறம் போகமாட்டாள்; (அங்கபங்கமான) பின்பு இவளை அந்நியர் ஒருவரும் (ஆசைப்பட்டுப்) பார்க்கமாட்டார்' என் றெண்ணி (நல்லெண்ணத்தோடு என் அங்கங்களை) அரிந்தீர்கள். (ஆதலால் எனக்குக்) குற்றம் செய்தீர்களோ? (நன்மையே செய்தீர்கள். இந்த நன்னோக்கமேயன்றித்) துளைகள் தோன்றும்படி நீங்கள் என் மூக்கை அரிதற்கு நோக்கம் வேறுண்டோ? (இல்லை.) இந்த (நல்ல) நோக்கத்தை அறிந்தல்லவா (யான் உங்கள்பால் நீங்கள் மூக்கரிதற்கு முன்கொண்டிருந்த அன்பினுக்கு) இருமடங்கான அன்பு கொண்டது. (இவ்வாறாக யான் உங்கள் உண்மை யுத்தேசத்தை உணரும் அறிவுடை யேனே யன்றி) அறிவில்லேனல்லேன்."

உருவம் - அழகு. பொருதல் - போர்செய்தல். கழல் - வீரகண்டை. பொன் உருவப் பொரு கழலீர் - பொன்னாலாகிய, அழகுடைய, போர்த்தொழிற்கு அங்கமான வீரகண்டை அணிந்தவர்களே. புழை - துவாரம். அரிவான் - அரிதல். அவன் வருவானேன்? என்பதில் வருவான் வருதலெனப் பொருள்படல்போல, அரிவான் அரிதல் எனப் பொருள்பட்டது. பொருள் - குறித்தபொருள் - உத்தேசம். மூக்கரிவான் பொருள் என்பது மூக்கரிதலினது பொருள் அல்லது மூக்கரிதற்குப் பொருள் என ஆறன் உருபு அல்லது நான்கன் உருபு தொக்குவந்தது. மருங்கு - பக்கம்.

["இயல்பாகவே கொடிய கோபகுணமுடைய இராக்கதர் என்னை நீங்கள் இவ்வாறு செய்ததை யறிந்தால், உங்களை அழித்தலோ டமை யாமல், உலகத்தையே அழித்துவிடுவார்கள். உயர்குடிப்பிறந்தார் தங்களாற் பிறர்க்குத் தீங்கு நேரவொட்டார். ஆதலால், என் அன்புக் காக நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லையாயினும், உலக மழியாமைப் பொருட்டாயினும் ஏற்றுக்கொள்ளுங்கள்." என்று சொல்லிச் சூர்ப்ப நகை தொழுது இரந்து நின்றாள். இராமன், சினந்து "உன் பாட்டி தாடகையைக் கொன்ற சரமிருக்கிறது. சாவாது தப்பியோடிப்போ. அரக்கர்வருக்கம் அனைத்தையும் அழிப்பதை என் ஜென்மவிரதமாகக் கொண்டுள்ளேன். நாங்கள் தசரதசக்கரவர்த்தி குமாரர். தாய்கட் டளையைத் தலைமேற்கொண்டு தவவேடம் தாங்கி வனவாசம் செய்கின் றேம். மறையவரும் மாதவரும் வேண்டிக்கொண்டவாறு அரக்கர் இனத்தை அழித்தபின்பே அயோத்தியை அடைவேம். இமையவரை வென்றவர் இராக்கதர், இவர்கள் எளிய மனிதர் என்று எண்ணாதே. நீ வலியாரென்று கருதும் இராக்கதர் இயக்க ரெல்லாரையுங் கொண்டு வருவாயானால், அவர்களை உன் எதிரே கொன்றிடுவேம்" என்றான்.

அவள், "நீ என்னை இராட்சசியென்று இகழாமல் ஏற்றுக்கொள்வா யானால், நீ கூறியவாறே இராக்கதரெல்லாரையும் கொல்லலாம். நீங்கள் இவளைக் கைவிடமாட்டீ ரென்றாலும் யானும் இருத்தல் அதிகமோ? என்னையுங் கூடவைத்துக்கொண்டால், அரக்கரோடு அமர்செய்யும் காலத்தில் 'பாம்பறியும் பாம்பின்கால்' என்றவாறு, அந்த அரக்கர் செய் யும் மாயங்களனைத்தையும் அரக்கியாகிய யான் அறிந்து தடுப்பேன். 'என்னைக் கொழுநனாகக் கொண்டாள் இவளொருத்தி யிருக்கின்றாளே' என்பாயாகில், என்னை இளையவனோ டிருக்கச்செய்வாயாக. அவ்வா றிருக்கச்செய்வாயானால், அவனுடன் நீயும் நானும் ஆக மூவரும் ஏக மாகக் கூடினால், இராக்கத ரெல்லாரையும் எளிதாக வென்றிடலாம். இராவணனே எதிர்வா னென்னினும் யான் இளையேன்" என்றாள்.]

சூர்ப்பநகை இராமனுக்குச் சொன்னது.

379 "பெருங்குலா உறுநகர்க்கே ஏகும்நாள் வேண்டும் உருப்
பிடிப்பே னன்றேல்
அருங்கலாம் உற்றிருந்தான் என்னினும் ஈங் கிளையவன்தான்
அரிந்த நாசி
ஒருங்கிலா இவளோடும் உறைவேனோ என்பானேல்,
இறைவ! ஒன்றும்
மருங்கிலா தவளோடு மன்றோ நீ நெடுங்காலம்
வாழ்ந்த தென்பாய்."

இ - ள். "அயோத்திநகரத்துக்கு (நீங்கள் திரும்பிச்) செல்லுங் காலத்தில் (எனது இராக்கத உருவத்தைக் கண்டு சனங்கள் வெருவவோ வெறுக்கவோ செய்யாமல் அவர்கள் ஏற்றுக்கொள்ளுதற்கு) வேண்டிய வடிவத்தை (என்னுடைய மாயாசத்தியால்) எடுத்துக்கொள்வேன். இளையவன் '(சீசீ!) நாசியில்லாதவளோடு நான் வாழ்வேனோ!" என்று (தடை) சொல்வானானால், 'இடையில்லாதவளோடன்றோ, யான் நெடுங்காலம் வாழ்ந்தது' என்று (சமாதானம்) கூறுவாயாக."

குலா - கொண்டாட்டம். உறு - மிகுந்த. பெரும் குலா உறு நகர் - பெருத்த (ஆடல் பாடல்களின் கொண்டாட்டம் அல்லது திரு விழாக்) கொண்டாட்டம் மிகுந்த நகரம் - அயோத்தி. நன்றேல் (-வேண்டும் உருப்பிடித்தல் - நல்லதானால்) வேண்டும் உருப்பிடிப்பேன் என மாற்றிப் பொருள் கொள்க. முந்திய உரைகாரர் 'அன்றேல்' என்று பிரித்து 'அல்லாவிடில்' என்று பொருளுரைத்தார். அது முன்பின் தொடர்ச்சியோடு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. கலாம் - கோபம். அரும் கலாம் என்பதில் அருமை இன்மை குறித்தது, இல் லாத கேடன் அதாவது கேடில்லாதவன் என்று பொருள்படும் 'அருங் கேடன்' என்பதிற் போல. அருங் கலாம் உற்றிருந்தான் - இல்லாத (அதாவது நீங்கிய) கோபமுற்றிருந்தான் - நீ எனக்காகப் பரிந்து பேசலால் என்மீது கொண்டிருந்த) கோபம்நீங்கியிருந்தான். இந்த அருங்கலா முற்றிருந்தான் என்ற தொடர்மொழி அற்றபற்றன் அதாவது பற்றற்றவன் என்று பொருள்படும் 'வீதராகன்' என்னும் வட

மொழித் தொடர்மொழிபோல நின்றது (சிந்தாமணி 2547-ம் பாட்டுரை பார்க்க.). மருங்கு ஒன்றும் இலாதவள்—இடை சிறிதும் இல்லாதவள்.

"இப்பொழுது உன் தம்பி நீ கூறுதலாற் கோபம் நீங்கி என்னை மணஞ்செய்தற்கு ஒருசார் உடன்படினும், மூக்கில்லாதவளோடு எப்படி மனம்பொருந்து வாழ்வேனென்று ஒருசார் தடைகூறுவானாயின், நான் இடையில்லாதவளோடு வாழ்கின்றேனே, நீ மூக்கில்லாதவளோடு வாழத் தடையென்ன? என்று தக்க விடையளித்து அவனை உடன்படுத்துவாய் என்றனளென்பது 2, 3, 4 அடிகளின் கருத்து. பிராட்டியாரை இடையில்லாதவளென்றிகழவைத்துக் கவியானவர் அரக்கியின்வாக்கினாலேயே அவரது அழகை நிலைநிறுத்தினார்."

மேற்கூறியவாறு சூர்ப்பநகை சொல்லக்கேட்ட இலக்குமணன் கோபங்கொண்டு, அவள்மேற் பிரயோகித்தற்குத் தன்கையிலிருந்த வேலை நோக்கிக்கொண்டு, இராமனை நோக்கி "இவளைக் கொல்லாவிட்டால் மிகவுந் தொந்தரை செய்வாள். உனது கட்டளை யாதோ?" என, அவன் "சென்றொழியாளேல், கொன்றொழித்தல் நன்று" என்றான். எனவே, அவள், இவர்கள் எனக்கு இம்மியும் இரங்கார். இனிமேல் இங்கேயிருந்தால், என்னுயிரை இழந்திடுவேன் என்றெண்ணி "மூக்கையுங் காதையும் போக்கிய உங்களுடன் வாழ உடம்படுவேனோ? உங்கள் உள்ளத்தை உணர்தற்கு வஞ்சனையாக வாழ்வேனென்றேன். காற்றினும் கடுமையுடையவனும் கனலினும் கொடுமையுடையவனும் உங்கள் உயிருக்குக் காலனுமான கரனை இப்பொழுதே கொண்டுவருகிறேன் என்று கோபத்தோடு கூறிப் போயினாள்.

சூர்ப்பநகைப்படலம் முற்றிற்று.

(தொடரும்.)

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்

எழுதுவது.

[௯௦அ-ஆம்பக்கத்தொடர்ச்சி]

70-வது சூத்திரம்.

பெயர்நிலைக் கிளவி காலந் தோன்ற
தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:—பெயர்ச்சொல் காலந்தோன்றா; தொழிற்பெயராயிற்காலந்தோன்றும் எ-று; (இனி ஒருகருத்து: தொழில்நிலைப்பெயர்ச்சொல் காலந்தோன்றா, காலம் ஒட்டுந் தொழிற்பெயர் அல்லாதவிடத்து எ-று).

சேனாவரையர்:—பெயர்ச்சொல் காலந்தோன்றா, வினைச்சொல்லோடொக்கும் ஒருகூறல்லாதவிடத்து எ-று. (பெயராகியநிலையையுடையது பெயர்நிலையென அன்மொழித்தொகை. பெயர்-பொருள். தொழினிலையுமது. ஒட்டுமென்பது உவமச்சொல்)

நச்சினார்க்கினியர்:—பெயர்ப்பெயராகியசொல்லும், அப்பெயராது நிலையிலேநிற்றலையுடையசொல்லும் காலந்தோன்றுவாய்நிற்கும்; ஒரு பொருளது புடைபெயர்ச்சியாய்க் காலந்தோன்றுதற்குப்பொருந்தும் ஒருகூற்றுத் தொழிற்பெயரல்லாவிடத்து. பெயர் தொழினிலை என்பன ஆகுபெயர். பெயர்-பொருள்; தொழினிலை-காலம்; ஒட்டும்-பொருந்தும்.

பெயர்நிலைக்கிளவி என்பதற்கு உரையாசிரியரும் சேனாவரையரும் பெயர்ச்சொல் என்று பொருள்கொண்டனர். நச்சினார்க்கினியர் பெயர்க்கிளவி, நிலைக்கிளவி என்று பிரித்துப் பெயர்ப்பெயராகியசொல்லும் அப்பெயராது நிலையிலேநிற்றலையுடையசொல்லும் என்று பொருள்கொண்டார்,

அவ்வாறு பிரிப்பதற்குக் காரணம், உண்டல் பூசல் என்பவை காலந் தோன்றா தொழிற்பெயராயிருத்தலின், அவையும் இச்சூத்திரத்துள் வேண்டும் என்பது கருதிப்போலும்.

இரண்டாகுவதே
71-வது சூத்திரம்.. ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யெவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்
பவ்விரு முதலிற் றோன்று மதுவே.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:—இரண்டாம் எண்ணுமுறைமைக்கண்ணது ஐ என்னும் பெயரையுடைய வேற்றுமைச்சொல்; அது யாண்டுவரினும் வினையும் வினைக்குறிப்பும் என அவ்விரண்டையும் தனக்குத் தோற்றுநிலமாக உடைத்து: அவ்விரண்டும் நிமித்தமாகத் தோன்றுமெனினு மமையும் எ-று.

சேனாவரையர்:—'பெயர் ஐ ஒடு கு...' என்னுஞ்சூத்திரத்து ஐயெனப் பெயர்பெற்ற வேற்றுமைச்சொல் இரண்டாவதாம். அஃது யாண்டுவரினும் வினையும் வினைக்குறிப்புமாகிய அவ் விரண்டுமுதற்கண்ணுந் தோன்றும், அவை பொருளாக வரும் எ-று.

நச்சினார்க்கினியர்:—'பெயர் ஐ ஒடு கு...' என்னுஞ் சூத்திரத்து ஐயெனப் பெயர்பெற்ற வேற்றுமைச்சொல் இரண்டாவதாம்: அஃது யாண்டுவரினும் வினைச்சொல்லினும் வினைக்குறிப்புச்சொல்லினும் பிறந்த செயப்படுபொருளாகிய அவ்விரண்டுகாரணத்தின்கண்ணுந் தோன்றும்.

'இரண்டாகுவதே, ஐயெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி' என்பதன் பொருளில் மூவருக்கும் மாறுபாடில்லை. வினையே வினைக்குறிப் பவ்விரு முதலிற் றோன்றும் என்பதன் தாற்பரியார்த்தமாகிய வினைச் செயப்படுபொருளினும், வினைக்குறிப்புச்செயப்படுபொருளினும் தோன்றும் என்பதிலும் மூவருக்கும் மாறுபாடில்லை. ஆனால், வினையே வினைக் குறிப் பவ்விருமுதல் என்பதற்கு உரையாசிரியர் வினை வினைக்குறிப்பு அவ்விரண்டையும் தோற்றுநிலமாகக்கொண்டது அல்லது அவ்விரண்டையும் நிமித்தமாகக்கொண்டது என்று இருவிதமாகப் பொருள்

கொண்டுள்ளார். இவ்விலக்கணம் ஒடு, கு, இன், கண் இவைகளுக்கும் பொருந்தும். மேலும், வினையும் வினைக்குறிப்பும் காரணமா? காரியமா? என்று ஆராய்தல்வேண்டும். ‘வினையே செய்வது செயப்படு பொருளே.... ஆயெட் டென்ப தொழின்முத னிலையே’ (தொல். சொல். 112) என்னுஞ் சூத்திரத்தின்கண் முதனிலை என்பதற்குக் காரணம் என்று சேனாவரையர் பொருள் உணர்த்தியுள்ளார். ஆதலால் இங்கும் முதல் என்பதற்குக் காரணம் என்று பொருள்கொள்ளுவதே தக்கதென்று தோன்றுகிறது. சேனாவரையர் ‘வினையும் வினைக்குறிப்புமாகிய அவ் விரண்டுமுதல்’ என்று பொருள்கூறி, ‘வினையே வினைக்குறிப்பென்று ராயினும், அவற்றின் செயப்படுபொருளே கொள்ளப்படும்’ என்று கூறுகின்றார். நச்சினார்க்கினியர் ‘வினைச்சொல்லினும் வினைக்குறிப்புச் சொல்லினும் பிறந்த செயப்படுபொருளாகிய அவ் விரண்டுகாரணம்’ என்கின்றார். இவ்விரண்டனுள் நச்சினார்க்கினியர்கூறுவதே பொருத்தமானது. ஏனெனில், வினை வினைக்குறிப்பு இவ்விரண்டுசொல்லையும் வினைக்காரணம், வினைக்குறிப்புக்காரணம் என்று சேனாவரையர்க்கு ஆகுபெயராக்கிக்கொள்ளவேண்டியுள்ளது. நச்சினார்க்கினியருக்கும் வினை, வினைக்குறிப்பு இவ்விரண்டினையும் வினைச்சொல், வினைக்குறிப்புச்சொல் என்று ஆகுபெயராய்க் கொள்ளவேண்டியிருப்பினும் இலக்கணத்தில் ஆசிரியர் அவ்வாறு ஆளும் வழக்குமிகுதிபற்றி எளிதென்க. இருவரும் முதல் என்பது முதனிலை என்பதன் ஏகதேசமாகக்கொண்டு அதற்குக் காரணம் என்று பொருள்கொண்டனர்போலும். ‘வினையே செய்வது செயப்படு பொருளே—நிலனே காலங் கருவி யென்றா—வின்னதற் கிது பய னாக வென்னு—மன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ—யாயெட் டென்ப தொழின்முத னிலையே’ (தொல். சொல். 112) என்னுஞ் சூத்திரத்தில் தொழின்முதனிலை எட்டு என்று கூறியிருக்கும்போது இச் சூத்திரத்தில் முதல் என்பதற்துச் செபப்படுபொருள் என்று எவ்வாறு பொருள்கொள்ளலாம் எனின், செய்வது முதல்வேற்றுமையாற் கூறப்பட்டதாலும், நிலன் காலம் முதலியன மூன்றாமுதலிய மற்றவேற்றுமைகளாற் கூறப்போவனவாதலாலும், எஞ்சியிருக்கும் செயப்படு பொருளே இங்குக் கூறியுள்ள முதலுக்குப் பொருள் என்று கொண்டனர் என்க. நச்சினார்க்கினியர் செயப்படுபொருளென்ற சொல்லை ஏற்புழிக்கோடலால் வந்ததாகக் கூறுகிறார்.

இயற்றப்படுவதும் வேறுபடுக்கப்படுவதும் எய்தப்படுவது[1] மெனச் செயப்படுபொருள் மூன்றும் என்று சேனாவரையர் கூறுகின்றார்.

ஐ, ஒடு முதலிய வேற்றுமைகளுக்கு இரண்டாவது, மூன்றாவது முதலிய வேற்றுமை யென்று பெயர்கொண்டது, வடமொழியில் அதே பொருள் கொண்ட பிரத்தியய (ப்ரத்யய:)ங்களுக்கு துவிதீயை (த்விதீயா), திருதீயை (த்ருதீயா) முதலிய பெயரை யொத்துள்ளது. "துதியை, திருதியை என்றாற்போலத் தொல்காப்பியரும் 'இரண்டாகுவதே', 'மூன்றாகுவதே' என மொழிபெயர்த்துக் கூறுவர்" என்று பிரயோகவிவேகநூலார் கூறுவதுங் காண்க.*

இச்சூத்திரத்தில் 'ஐ' என்னுஞ் சொல்லை யுத்தேசித்து அதன் பெயர் இரண்டாம்வேற்றுமை என்றும் அது செயப்படுபொருளில் வரும் என்றும் இரண்டு விதிப்பது வாக்கியபேதமன்றோ என்ற ஆசங்கை தோன்றலாம். அதற்கு இரண்டாம்வேற்றுமை என்னும் பெயர் 'அவை தாம், பெயர் ஐ ஒடு கு.........' (தொல். சொல். 64) என்னுஞ் சூத்திரத்தாலேயே விதிக்கப்பட்டது: அச்சூத்திரத்தால் விதிக்கப்பட்ட 'இரண்டாம்வேற்றுமை' என்ற பெயரை இச்சூத்திரம் அநுவதித்து அது செயப்படுபொருளில் வரும் என்பதை மாத்திரம் விதிக்கின்றது என்று கொள்க*

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் பதிப்பில் 'அஃதிரண்டு வரினும் வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டு முதற்கண்ணுந் தோன்றும், அவை பொருளாக வரும்.' என்றுளது. சைவசித்தாந்தக்

---

[1]இது பர்த்ருஹரியால் இயற்றப்பெற்ற வாக்யபதீயம் என்னும் நூலின் 3 ஆம் காண்டத்தில் 45ம் காரிகையாகிய

நிர்வர்த்யஞ்ச விகார்யஞ்ச ப்ராப்யஞ்ச த்ரிவிதம் மதம்
தத்ரேப்ஸிததமம் கர்ம..............................||

என்பதன் மொழிபெயர்ப்பு.

*வேற்றுமையுருபுகள் இவையென்பதை 'ஐ ஒடு கு இன் அது கண்ணென் னும்—அவ்வா றென்ப வேற்றுமை யுருபே' (தொல். எழுத். புண. 11.) என்னுஞ் சூத்திரம் உணர்த்துகின்றது.

கழகப்பதிப்பில் 'அஃது ......முதற்கண்ணுந்தோன்றும், அவை பொருளாக...' என்பதற்குப் பிரதியாக '....முதற்கண்ணுந் தோன்றுமவை பொருளாக...' என்றுளது. பின் பாடத்தின்படி சூத்திரத்திலுள்ள அவ்விருமுதலிற்றேன்றுமது என்பது பயனிலையாயிருக்கவேண்டும். அதற்கு எழுவாய் சூத்திரத்திற் காணப்படவில்லை. வேற்றுமைக்கிளவியை எழுவாயாகக் கொள்ளின், அஃது இரண்டாகுவதே என்பதற்கு அன்றி இதற்கு எழுவாயாகாது. மேலும், சேனாவரையத்திலுள்ள 'அஃது ... அவ்விரண்டுமுதற்கண்ணுந் தோன்றுமவை பொருளாக வரும்' என்ற வாக்கியத்தில் அவ்விரண்டு முதற்கண்ணுந் தோன்றுமவை என்பது அஃது என்பதனோடும் அந்நுவயிக்கவில்லை. பொருளாக என்பதனோடும் அந்நுவயிக்கவில்லை. அஃது என்பதனோடு அந்நுவயிக்குமாயின் தோன்றுமவை என்பதற்குப் பிரதியாகத் தோன்றுமது என்றிருத்தல் வேண்டும். அவ்விரண்டு முதற்கண்ணுந் தோன்றுதலையுடையன உருபுகளேயன்றிப் பொருளல்லவாதலாற் பொருளாக என்பதனோடும் அந்நுவயிக்காது. ஆதலால் தாமோதரம்பிள்ளையவர்களின்பாடமே பொருத்தமானது என்று தோன்றுகிறது. அவை என்பதற்கு வினைமுதல்[1], வினைக்குறிப்பு முதல் என்று பொருள்.

காப்பி னொப்பி னூர்தியி னிழையி
னொப்பிற் புகழிற் பழியி னென்ற

72-வது ..............................................

சூத்திரம். ..............................................

அன்ன பிறவு மம்முதற் பொருள
வென்ன கிளவியு மதன்பால வென்மனார்.

இச்சூத்திரத்திற்கு உரைகாரர் மூவரும் ஒரேவிதமாகப் பொருள் கொண்டனர். உரையாசிரியர் இச்சூத்திரத்தையும் இதற்குமுன் கூறப்பட்ட சூத்திரத்தையும் ஒரே சூத்திரமாகக் கொண்டுள்ளார். அதற்குக் காரணம் அவ்விரண்டும் ஒரேவேற்றுமையைப்பற்றிக் கூறுதலே ஆனல், அவ்வாறு ஒரே சூத்திரமாகக்கொள்ளின் வாக்கியபேதம் என்ற குற்றம் வரும்.

---

[1] இங்கு வினைமுதல் என்பதற்குக் கருத்தா என்று பொருளல்ல; வினைக்குக் காரணம் என்று பொருள். அக்காரணம் செயப்படுபொருள் எவ்வாறு என்பது முன்னர்க் கூறப்பட்டது.

ஊன்றிப்பார்ப்பின் இச்சூத்திரம் எற்றுக்கு? முற்சூத்திரமே போதாதா? என்று ஐயந் தோன்றுகிறது. ஆயினும், 'என்மனார்' என்பதனால் முன்னோர்கூறியவற்றைத் தாமுங் கொண்டு ஆசிரியர் கூறினார் போலும்.

73-வது சூத்திரம்.

மூன்றுதவதே,
ஒடுவேனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
[1]வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே.

இச்சூத்திரத்திற்குப்பொருள் மூவருக்கும் ஒன்றே. இங்கு ஒடு என்பது மாத்திரங் கூறியிருப்பினும்,[2] 'ஒம்படைக் கிளவிக் கையு மானுந் —தாம்பிரி விலவே தொகைவரு காலை' (தொல். சொல். 97) என்னுமிடத்தும் 'கு ஐ ஆனென வரூஉ மிறுதி—அவ்வொடு சிவணுஞ் செய்யுளுள்ளே' (தொல். சொல். 108) என்னுமிடத்தும் 'ஆன்' என்னுமுருபை ஆசிரியரே உடம்பொடுபுணர்த்துக்கூறியிருப்பதால், ஒடுவோடு ஆனும் மூன்றாம்வேற்றுமையுருபாகக் கொள்ளப்படுகிறது. இக்காலத்தில் வினைமுதற்பொருளிலும் கருவிப்பொருளிலும் 'ஆன்,' 'ஆல்' இவை கூறப்படுகின்றனவே யொழிய, 'ஒடு' கூறப்படவில்லை. இவ்வாறே சேனாவரையர்காலத்திலும் இருந்தது என்பது 'வினைமுதல் கருவிக்கண் ஒடுவெனுருபு இக்காலத் தருகியல்லது வாராது' என்னும் வாக்கியத்தால் தெளிவாகிறது. ஆசிரியர்காலத்தில் 'ஒடு' வே அப்பொருள்களில் மிகுதியாகவழங்கியிருத்தல்வேண்டுமென்றுதோன்றுகின்றது.

வினைமுதற்பொருளில் வருகின்ற 'ஒடு' விற்கு உதாரணமாகக் 'கொடியொடுதுவக்குண்டான்' என்பதை மூவரும் கொடுத்துள்ளனர். அகத்தியனாற் றமிழுரைக்கப்பட்டது என்னுமிடத்து மூன்றாம்வேற்றுமை வருஞ் சூத்திரத்திற் கூறியுள்ள 'அதன்வினைப்படுதல்' என்

---

[1]பாணினியினால் வடமொழியில் இயற்றப்பட்ட அஷ்டாத்யாயியின் 2-வது அத்தியாயம் 3-வது பாதம் 18-வது சூத்திரமாகிய 'கர்த்ருகரணயோஸ்த்ருதீயா' என்பதற்கும் இச்சூத்திரத்திற்கும் மிகப் பொருத்தமுளது.

[2] 'தொல்காப்பியனார் ஒடுவென்னும் பிரத்தியயமொன்றே மூன்றாம்வேற்றுமைக்குருபாகச் சொன்னார். ஆலு மானும் மூன்றனுருபே யென்றார் அவிநயனார்' என்று வீரசோழியவுரையிற் கூறியுள்ளது காண்க.

பதினாலேயே வரப்பெறாதா? அவ்வாறு வருமெனின் இச்சூத்திரத்தில் 'வினைமுதல்' என்பது எற்றுக்கு? நச்சினார்க்கினியத்தில் 'இது இயற்றும் வினைமுதலும் ஏவும் வினைமுதலும் என இருவகைப்படும். கொடியொடு துவக்குண்டான் என்பது இயற்றும் வினைமுதல். அரசனா லியற்றப்பட்ட தேவகுலம் என்பது ஏவும் வினைமுதல்' என்று கூறியுளது. கொடி தானே வினையைச்செய்வதால், அஃது இயற்றும் வினைமுதலென்றும், அரசன் பிறராற்செய்வித்தலால் அஃது ஏவும் வினைமுதலென்றும் கொண்டார்போலும்.

இங்கு வீரசோழியவுரைகாரர் தாதுப்படலம், 6-வது செய்யுளின் கீழ்க் கருத்தா 'கேவலக் கருத்தா, காரிதக்கருத்தா[1], காரிதக் காரிதக் கருத்தா' வென மூவகைப்படுமெனவும், அவற்றிற்கு உதாரணம், 'உண்டனன், ஊட்டினன், ஊட்டுவித்தனன்' எனவுங் கொடுத்திருப்பது நோக்கத்தக்கது.

74-வது சூத்திரம்.

[2]அதனி னியற லதற்றது கிளவி
.................................................
[3]அதனோ டியைந்த வொருவினைக் கிளவி
.................................................
இன்னா னேது[4] வீங்கென வரூஉ
மன்ன பிறவு மதன்பால வென்மனார்.

---

[1]காரிதக்கருத்தா என்பதும் ஏவும்வினைமுதல் என்பதும் ஒருபொருட் கிளவி.

[2]'அது வென்றது உருபேற்கும் பெயர்ப்பொருள்' (சேனாவரையர்).

[3]'அதனோடியைந்த வொருவினைக்கிளவி' என்று பொதுப்படக்கூறியதனால் ஆசிரியனோடு வந்த மாணாக்கன், மாணாக்கனோடு வந்த ஆசிரியன் என்ற இரண்டும் பெறப்படுமாயினும், 'ஒருவினை யொடுச்சொ லுயர்பின் வழித்தே' (தொல். சொல். 91) என்று சிறப்பாக விதித்தலால் ஆசிரியனோடுவந்த மாணாக்கன் என்பதேபெறப்படுதல்காண்க. வடமொழியில் ஸஹயுக்தே(அ)ப்ரதாநே (அஷ்டாத்யாயீ, 2,3,19) என்னுஞ் சூத்திரப்படி மாணாக்கனோடுவந்த ஆசிரியன் என்றே கூறவேண்டும். இது வடமொழிக்குந் தென்மொழிக்குமுள்ள பல பேதங்களில் ஒன்று.

[4]வடமொழியிலும் ஏதுப்பொருளில் மூன்றாம்வேற்றுமை வருமென்பது 'ஹேதௌ' (அஷ்டாத்யாயீ, 2, 3, 23) என்னுஞ் சூத்திரத்தாற் கூறப்படுகின்றது.

இச்சூத்திரத் தொருபகுதியான இன்னானேது என்பதற்கு உரையாசிரியர் இன்னான் என்புழியும், ஏதுவின்கண்ணும் என்று பொருள் கொண்டார். சேனாவரையர் 'இன்னானென்பது உம்மைத்தொகை, அவற்றதேது, இன்னானேது; அதனினாதலெனக் காரகவேது மூற் கூறப்பட்டமையான் இது ஞாபகவேதுவாம்' என்றுகூறி, 'வினைவிகாரத்தை முதன்மேலேற்றிக் கூறும் பொருண்மை இன்னானென்பதனாற் பெறப்படாமையான் அது போலியுரையென்க' என்று உரையாசிரியரை மறுத்துள்ளார். சேனாவரையர் கூறியுள்ள பொருள் ஏது என்பதினாலேயே கிடைக்கும். இன்னான் என்பது அவசியமில்லை. உரையாசிரியர் இன்னான் என்பதற்கு இவ்வாறுள்ளவன் என்று பொருள்கொண்டு அதற்கு உதாரணமாகக் கண்ணாற் கொத்தை, காலான்முடவன் என்னுமிவற்றைக்கூறியது பொருத்தமானது என்றே தோன்றுகிறது. ஒழுக்கத்தாற் பேரியவன் என்று உதாரணங் காட்டின், சேனாவரையர் கூறிய மறுப்புக்கே இடனில்லை. 'அன்னபிறவும்' என்பதனால், 'கண்ணாற் கொத்தை' முதலியவற்றை அடக்கிய சேனாவரையர் சூத்திரத்துள்ளேயே 'இன்னான்' என்பதனால் அடக்கிக்காட்டிய உரையாசிரியர்கொள்கையை மறுத்தது பொருந்துமா?

'அதனினியற'லென்பதற்குத் தச்சன்செய்த சிறுமாவையமென்று உதாரணங்காட்டினார் உரையாசிரியர் எனின் அற்றன்று; தச்சன் செய்த சிறுமாவையமென்பது "வினைமுதல் கருவி யனைமுதற்று" என்புழியடங்குதலால் அது போலியுரையென்க' என்று சேனாவரையர் உரையாசிரியரை மறுத்துள்ளது பொருத்தமாயுள்ளது.

பாடபேதம்:—இளம்பூரணப்பதிப்பில் 'இன்னான் என்புழியும் ஏதுவினைக்கண்ணும்' என்னுமிடத்து ஏதுவினைக்கண்ணும் என்பதற்குப் பிரதியாக ஏதுவின்கண்ணும் என் றிருக்கவேண்டும்.

தாமோதரம்பிள்ளையவர்களின் சேனாவரையப்பதிப்பில் 'வடநூலுட் பொருள்வேற்றுமையல்லது உருபுவேற்றுமையின் ஒருவேற்றுமையாக வோதப்பட்டமையானும்' என்று உள்ளது! இவ்வாக்கியத்தின் சங்கருப்பத்தைநோக்கின் வடநூலுள், பொருள்வேறுபாடின்றி உருபுகள் பலவிருப்பினும், அவை ஒருவேற்றுமையாகவே கொள்ளப்படுதலானும் என்று அதற்குப் பொருள்கொள்ளவேண்டும். அவ்வாறாயின்

'வடநூலுட் பொருள்வேற்றுமையல்லது உருபுவேற்றுமையாயின் (அவை) ஒரு வேற்றுமையாக வோதப்பட்டமையானும் என்று பாட மிருப்பின் நன்குபொருந்துமென்று தோன்றுகிறது.* சைவசித்தாந்தக் கழகப்பதிப்பிலோ 'வடநூலுட் பொருள்வேற்றுமையல்லது உருபு வேற்றுமையான் ஒரு வேற்றுமைபாக வோதப்படாமையானும்' என்று இருப்பினும், அச்சொற்றொடர் மறைமுகத்தாற் பொருளைப் புலப்படுத்து கின்றது.

| | |
|---|---|
| 75-வது சூத்திரம். | நான்காகுவதே,<br>கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி<br>யெப்பொரு ளாயினுங் கொள்ளு மதுவே. |

எப்பொருளாயினுங்கொள்ளும் என்பதற்கு எப்பொருளையுங் கொள்ளுதலாகிய பொருளுடைத்து என்று பொருள்கொள்ளவேண்டும். இஃதே உரைகாரர்கள் கூறியுள்ள 'அது யாதானுமொரு பொருளாயி னும் அதனை யேற்றுநிற்கும்' என்பதன் கருத்து.

கொடை என்பதில் இரண்டு அமிசம் உள்ளன; பிறரை அடையச் செய்தல் ஒன்று; தன்னைவிட்டுநீங்குதல் மற்றொன்று. பொதுவாக ஒவ் வொருகொடையிலும் இவ்விரண்டும் இருக்கவேண்டும். 'மாணுக்கற்கு அறிவுகொடுத்தான்' என்னுமிடத்துக் கொடைப்பொருள் அறிவு, அதனை மாணுக்கன்பால் அடைவித்தபோதிலும், அது ஆசிரியனைவிட்டு நீங்கவில்லை. அவ்விடத்தும் நான்காம்வேற்றுமை வருமென்பதற்கு 'எப்

*ஒடுவும் ஆனும் வெவ்வேறு பொருள்களில்தான் வருமென்றுகருதி, டாக் டர் கால்ட்வெல் (Dr. Caldwell) 'அவற்றைத் தமிழ் இலக்கணக்காரர்கள் இரண்டுவேற்றுமையாகக் கூருது ஒருவேற்றுமையாகக் கூறினது வடமொழி யைப் பின்பற்றியே' என்று கூறுவதற்கு விடையாகுமாறு 'ஒடுவும் ஆனும் இரண்டு வேற்றுமையாகற்பால வெனின் அற்றன்று........ஒரு வேற்றுமை யாகவே யோதினாரென்க' என்று பன்னூற்றாண்டுகட்கு முன்பே சேனாவரையர் கூறியுள்ளமை அறியத்தகும்.

பொருளாயினும்' என்றார் என்று சேனாவரையர் கூறுகின்றார்.[1] உரையாசிரியர் "'எப்பொருளாயினும்' என்றார், மூன்றிடத்துப்பன்மை நோக்கி" என்று 'எப்பொருளாயினும்' என்ற சொல்லின்பயன் கூறியுள்ளார். செலவும் கொடையும் 'ஏனை யிரண்டு மேனை யிடத்த' (தொல். சொல். 30) என்னுஞ் சூத்திரப்படி தன்மை முன்னிலைக்கு வாராவிட்டாலும் 'எப்பொருளாயினும்' என்று இச்சூத்திரத்திற் கூறியிருப்பதால் கொடை மூன்றிடத்திற்கும் வரும் என்பதே அவர்கருத்துப்போலும்.

79-வது சூத்திரம்.

அறுதவதே,
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினு மிதன தி துவெனு
மன்ன கிளவிக் கிழமைத் ததுவே.

இச்சூத்திரத்திற்குப் பொருள் மூவரும் ஒரேவிதமாகக்கொண்டுள்ளனர். உரையாசிரியர் தற்கிழமை ஐவகைப்படுமென்றும், 'பிறிதின்கிழமை இதுபோலப் பகுதிப்படாது' என்றும் கூறியுள்ளார். சேனாவரையர் 'பொருளின்கிழமையும், நிலத்தின்கிழமையும், காலத்தின் கிழமையு மெனப் பிறிதின்கிழமை மூவகைப்படும்' என்றார். மெய்பிரிந்தாய தற்கிழமை என்பதற்குத் தன்மை (ஸ்வரூபம்) திரிந்ததால் உண்டாஞ் சம்பந்தம் என்று பொருள்கொள்ளலாம்.

---

[1] இதே விஷயம் வாக்யபதீயம், மூன்றாவது காண்டம் 262-ம் பக்கத்திலுள்ள ஹேலாராஜீயத்திற் கூறியுள்ளது. [illegible]

(இதற்குப் பொருள்:-) தியாகம் என்பது தானம். அதாவது தனக்கு உரியது என்பதை ஒழித்துப் பிறருக்கு உரியதாகக் கொடைப்பொருளைச் செய்வது. சூத்திரனுக்கு அறிவுகொடுக்கிறான் என்னுமிடத்தும் ஆசிரியனது திரண்ட அறிவின் ஒருபகுதி ஆசிரியனைவிட்டு மாணாக்கனுக்குப் போவதால், கொடுத்தல் தனக்கு உரிய முக்கியப்பொருளதேயாம். சிலர் கூறுவது 'ஆசிரியனது அறிவு ஆசிரியனைவிட்டுச் செல்லாததால் ஈண்டுக் கொடுத்தல் கௌணப்பொருளது என்றவாறு, சேனாவரையர் பின்கூறிய மதத்தைக் கைப்பற்றியுள்ளார்.

பாடபேதம்:— தாமோதரம்பிள்ளையவர்கள் சேனாவரையப்பதிப்பில் 'அது உடையதாய்நிற்கும் தன்னானும் பிறிதொன்றானும் இதனதிது வென்பதுபட நிற்குமதனாற் கிளவியிற்றேன்றும் கிழமையைப் பொருளாக வுடைத்து' என்றுளது. சைவசித்தாந்தக்கழகப்பதிப்பில் நிற்குமதனாற் கிளவியிற்றேன்றும என்பதற்குப் பிரதியாக நிற்குங் கிளவியிற்றேன்றும் என்றுளது. பின்னுள்ள பாடமே பொருத்தமாகும்.

ஏழாகுவதே,
81-வது சூத்திரம், கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் யிடத்தி னிலத்திற் காலத்தி
னனைவகைக் குறிப்பிற் றேன்று மதுவே.

சூத்திரத்திற் குறிப்பு என்னுஞ் சொல்லுக்கு 'அவற்றை யிடமாகக் குறித்தவழி அவ்வேற்றுமை தோன்றுமென்றவாறு. எனவே இடமாகக் குறிக்கப்படாதவழி அப்பெயர்க்கண் வேற்றுமை தோன்றாதென்பதாம். தன்னினமுடித்த லென்பதனான் ஏனைவேற்றுமைச் சொற்களும் அவ்வப் பொருட்கட் குறிப்பில்வழி அவ்வப்பெயர்க்கண் வாராமை கொள்க' என்று சேனாவரையர் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது[1].

82-வது சூத்திரம். கண்கால் புறமக முள்ளுழை கீழ்மேல்
பின்சா ரயல்புடை தேவகை யெனாஅ
முன்னிடை கடைதலை வலமிட மெனாஅ
வன்ன பிறவு மதன்பால வென்மனார்.

உரையாசிரியர் 'இனி, அவ்வேற்றுமையுருபு பலவாகலின் அவற்றை விரிக்கின்றார்' என்றும், 'தேவகை என்பது திசைக்கூற்று: அது வடக்கண் வேங்கடம், தெற்கண் குமரி என வரும்' என்றும் கூறியுள்ளார். அவர்மதத்தில் தேவகையைத்தவிர மற்றவையெல்லாம் ஏழாம் வேற்றுமையுருபுகளே. இம்மதத்தைச் சேனாவரையர் ([1])உருபாயின், ஏழாவதற்குக் கண்ணென்பது உருபாதல் மேலேபெறப்பட்டமையாற் பெயர்த்

[1] இதுபோலவே வடமொழியிலக்கணத்துள்ளும் விவக்ஷாதஃ காரகாணி என்ற நியாயம் உள்ளது.

துங் கண் கா லென்றல் கூறியதுகூறல். [2] 'ஊர்ப்புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், கைவலத்துள்ளது கொடுக்கும் எனப் புறம் அகம் வல மென்பனவற்றுவழி அத்துச்சாரியைகொடுத் துதாரணங் காட்டினது பொருந்தாது ; என்ற இரண்டு காரணங்களால் மறுத்துக் கண் கால் முதலியனவெல்லாம் ஏழாம்வேற்றுமைப்பொருளையுணர்த்தின என்று கூறியுள்ளார். நச்சினார்க்கினியர், கண், தேவகை இவ்விரண்டும் பொருள் என்றும் எஞ்சியவை உருபென்றும் கூறிச் சேனாவரையரை [1]கண் கால் முதலியன உருபை விளக்குதற்கு அவ்வுருபின் பொருளாய்நின்று கண்ணெனுருபு விரித்துக்கொண்டுநிற்கு மெனின், கண்ணென்னும் உருபின்பொருளாவது கண்ணென்னும் இடைச்சொல்லாலுணர்த்தப்படும் இடப்பொருண்மை யென்று பொருளுரைத்தாற் பின்வருகின்ற இடப்பொருண்மையை மூன்றுங் கூறிற்றேயாமாதலிற் கூறியதுகூறிற்றாம். [2]அல்லதூஉங் கண்ணகன்ஞால மென்புழிக் கண்ணென்னும் இடைச்சொல்லான் உணர்த்தும் இடப்பொருண்மைக்கும் இடத்துக்கண்ணெனக்* கண்ணெனுருபு மீண்டுங் கூறல்வேண்டும் ; [3]அல்லதூஉம் வடக்கண் வேங்கடம் என்புழிக் கண்ணெனுருபு விரித்தலின் ஒழிந்தவற்றிற்கு ஒவ்வாதாம்;† [4]அல்லதூஉம் ஆலின்கீழ்க்கிடந்த ஆ, மரத்தின்மேலிருந்த குரங்கு என்பன முதலியவற்றிற்குக் கண்ணெனுருபு கொடுத்து உலகம் வழங்காமை உணர்க ; என்ற நான்கு காரணங்களால் மறுத்து ' முன் இரண்டாவது முதலிய உருபுகளை முடித்தற்கு எடுத்தோதிய காப்புமுதலிய பொருள்களைப்போல் உருபை முடித்து நில்லாது ஈண்டுக்கூறிய பொருள்கள் கண்ணென்னும் உருபையே உணர்த்திநின்றன என்றலிற் சேனாவரையரும் இப்பொருள்களை

---

*கண்கண்ணென என்பதற்குப்பிரதியாக இடத்துக்கண்ணென என்று பொருள்நோக்கிக் கூறினார்போலும்.

†தேவகைக்கு உதாரணமாகிய வடக்கண் என்னுமிடத்துக் கண்ணுருபு பொருளைக் காட்டுமென்பது பொருந்தும். மற்ற இடங்களிற் பொருந்தாது என்று பொருள்.

உருபென்றே கூறினாராயிற்று' என்று கூறியுள்ளார். இடைச்சொல்லாகிய கண்ணினது பொருளில் உருபாகிய கண் வருமென்பது சேனாவரையர்கருத்தேயன்றி, அக் கண்ணின்பொருட்குப்பின் இவ்வுருபுக் கண் வருமென்பது அவர்கருத்தல்ல என்று கூறின் நச்சினார்க்கினியர் சேனாவரையரின்மேற் கூறும் முதற்குற்றம் நில்லாது. ஆலின்கீழ்க் கிடந்த ஆவை ஆலின்கட்கிடந்தது, மரத்தின்மேலிருந்த குரங்கை மரத்தின்கண் இருந்ததுஎன்று உலகம் வழங்கியுள்ளது எனச் சேனாவரையர் கூறியுள்ளார்; நச்சினார்க்கினியர் உலகத்தில் வழங்கவில்லை என்று இஃகுச் சொல்லுகிறார். ஆனால், 'பெயருந் தொழிலும்........' (தொல். எழுத்-132) என்னுஞ்சூத்திரத்தி னடியில் மரத்துக்குரங்கு, மரத்துக்கட் குரங்கு என்று அவரே உதாரணங்கூறியிருத்தல் முரணுகின்றது. 'கண் கால் புறமகமுள்ளுழை........' என்னுமிச்சூத்திரத்திற்கும் 'காப்பினொப்பின் ........'(தொல். சொல். 72), 'வண்ணம் வடிவே........'(தொல். சொல்-78), 'இயற்கையினுடைமையின்........'(தொல். சொல்-80), என்னுஞ்சூத்திரங் களுக்கும் பேதமுண்டு. 'காப்பினொப்பின்' முதலிய சூத்திரங்களில் அவ்வவ் வேற்றுமையுருபிற்குப் பின் காப்பு முதலிய பொருள்களை யுடைய சொற்கள் வருமென்பதே கருத்து. இங்கு அவ்வாறு கொள்ளின் கண்ணென்னும் வேற்றுமை யுருபிற்குப்பின் கால், புறம் முதலிய பொருள்களை யுடைய சொற்கள் வரும் என்று பொருள்கொள்ளவேண்டும். அவ்வாறு வருவது உலகவழக்கல்ல என்பது திண்ணம். ஆகையால், இச்சூத்திரம் கண்ணெனுருபின் பொருள்களை யுணர்த்துகின்றதா? கண்ணின் பொருளில்வரும் வேறுருபுகளை யுணர்த்துகின்றதா? என்று ஆராயவேண்டும். கால் புறம் முதலியன உருபுகளாயின், சேனாவரையர்கூறியவாறே ஊரகத்திருந்தான், ஊர்ப்புறத்திருந்தான் என்புழி அத்துச்சாரியை கொடுப்பது பொருந்தாது. ஏனெனில், சாரியைகள் உயர்திணைப்பெயருக்கும் அஃறிணைப்பெயருக்கும் பின்வருமேயன்றி, இடைச்சொற்களுக்குப்பின்னர் வாரா என்பது 'அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே' (தொல். எழுத். 113) என்னுஞ் சூத்திரத்தால் தெளிவாய் அறியப்படுகிறது. வேற்றுமையுருபிற்கும் பின்வருஞ் சொற்களுக்கு மிடையிற் சாரியை வருமென்று வேறெங்கேனும் விதித்திருப்பதாகத் தெரியவில்லை. மற்றவேற்றுமையிற் சொல்லுருபுகள் வருமிடத்து, அவ்வுருபுகளுக்கு முன்னேதான் சாரியை சேர்ந்துள்ளன. உ-ம். மரத்திலிருந்து, மரத்தி

னுடைய. மேலும், கால் புறம் முதலிய சொல்லுருபுகளை விதித்த ஆசிரியர் ஆறுவதுவேற்றுமையில் உடையஎன்பதையும், ஐந்தாம்வேற்றுமையில் இருந்து என்பதையும் ஏன் கூறவில்லை? என்ற கேள்விக்கு விடையளிக்கவேண்டியிருக்கும்[1].

வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
83-வது ஈற்றுநின் றியலுந் தொகைவயிற் பிரிந்து
சூத்திரம். பல்லா றகப் பொருள்புணர்ந் திசைக்கு
மெல்லாச் சொல்லு முரிய வென்ப.

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:— (இதனை இரண்டுசூத்திரங்களாகக்கொண்டார்). அக் கூறிய வேற்றுமைகள் தொக்குமுடியவும் வேண்டும்; அத்தொக்க வேற்றுமையுருபு விரியுங்கால் யாண்டுநின்று புலப்படுமோ வெனின், மொழியீற்றுக்கண்ணே புலப்படும் எ-று. உருபு தொக்கும் விரிந்தும் நிற்கும் என்றார், அவ்வுருபேயும் அன்று, ஆண்டுப் பிறசொற்களும் உள, அவ் வுருபேபோல வந்து ஒட்டநிற்பன; அவையெல்லாம் அவ் வுருபேபோல ஆண்டே தொகுதலும் விரிதலும் உடையன எ-று.

சேனவரையர், நச்சினார்க்கினியர்:—வேற்றுமைத்தொகையை விரிக்குமிடத்து, வேற்றுமையேயன்றி, அன்மொழித்தொகையை விரிப்புழிப் பல்லாற்றான் அன்மொழிப்பொருளொடு புணர்ந்துவரும் எல்லாச் சொல்லும் விரிக்கப்படும்.

'உரையாசிரியர் இரண்டு சூத்திரமாக அறுத்து ஆசிரியர் மதவிகற்பங்கூறித் தம்மத மிதுவென்பது போதா ஒன்றாகவுரைப்பாருமுளரென்றார். இரண்டாய் ஒன்றாயவழிப் 'பிறிதுரையின்மையின் உரையாசிரியர்கருத் திதுவேயாம்' என்று சேனவரையர் கூறியுள்ளார். ஆனால் இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணத்தில் இச்சூத்திரவுரையின்கண் 'ஒன்றாக வுரைப்பாருமுளர்' என்ற வாக்கியங் காணப்படவில்லை.

---

[1] இலக்கணவிளக்கவாசிரியர் இவ்வாறே பொருள்கொண்டுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

இச்சூத்திரத்திற்குச் சிவஞானமுனிவர்கூறும் பொருளும், சேனாவரையர்பொருளின்மேல் அவரது மறுப்பும் கவனிக்கத்தக்கன.

இச்சூத்திரத்திற்குச் சிவஞானமுனிவர் கூறும் பொருள்:—(ஒத்தினிறுதிக்கட் புறனடை). "காப்பினொப்பின் ........" என்றற்றொடக்கத்தனவாக ஈண்டுக்கூறியபொருளேயன்றி இன்னும் வேற்றுமைப்பொருளை விரித்துக்கூறுங்காலத்துக் காப்பினொப்பி னென்றற் றொடக்கத்துத் தொகைச்சொற்களின் வேறுபட்டுப் பொருளோடு புணர்ந்திசைக்கு மெல்லாச்சொற்களும் ஈண்டுக் கோடற்குரியவென்ப ரென்றவாறு. முடிக்குஞ் சொல்லைப் பொருள் என்றார், தொடர்மொழிப்பொருள் அதன்கண்ணதாகலின். காப்பினொப்பின் முதலிய சொற்கள் புரத்தல் ஓம்புதல் நேர்தல் நிகர்தல் என்றற்றொடக்கத்துப் பொருள்புணர்ந்திசைக்குஞ் சொற்களையெல்லாங் கருத்துவகையா னுள்ளடக்கித் தொகுத்தமொழியாய் நிற்றலின் அவற்றைத் தொகையென்றும், அதனினிபறல் அதற்றகு கிளவி என்றற்றொடக்கத்துத் தொடர்மொழிகளி னிறுதிச்சொற்களே ஈண்டுக் கொள்ளப்படுமென்பது விளக்கிய ஈற்றுநின்றியலுந்தொகையென்றும், ஊரைப்பேணும், ஊரைத் தாங்கும் என்றாற்போலப் பிறவாற்றான் வருவனவுங் காத்தற்பொருளே பயந்துநிற்றலின் அவையுந் தழுவுதற்குப் பல்லாறாகவென்றுங் கூறினார். வேற்றுமைத்தொகை விரியுமாறு 'வேற்றுமைப்பொருளை விரிக்குங்காலை' என்னுஞ்சூத்திரத்தாற் பெறப்பட்டதாலோவெனின்;— வேற்றுமைத்தொகையை விரிக்குங்காலை யென்னாமையானும், எச்சவியலுட் கூறும் வேற்றுமைத்தொகை விரியுமாறு வேற்றுமையியலுட் கூறுதற்கோ ரியைபின்மையானும், வேற்றுமையியலுள் உருபும் பொருளும் உருபு நிற்குமிடமு மாத்திரையே கூறி யொழிந்தாரன்றி வேறொன்றுங் கூறாமையானும், வேற்றுமைத்தொகை விரியுமாறு 'வேற்றுமைபியல' என்பதனாற் பெறப்படுதலின் வேறு கூறவேண்டாமையானும், வேண்டுமெனிற் பான்மொழி யென்னு முவமத்தொகையும் பாலினினிமைபோலு மினிமையையுடைய மொழியென விரிதலின் உவமத்தொகைக்கட் சொற்பெய்து விரித்தற்கு வேறுசூத்திரங் கூறாமை குன்றக்கூறலாய்முடியு மாகலானும் அச்சூத்திரத்திற் கது பொருளன்றென் றொழிக.

மேலும், சேனாவரையர் "இதனை 'வேற்றுமைத்தொகையேயுவமைத் தொகையே' என்னுஞ் சூத்திரத்தின் பின்வைக்கவெனின், அதுவும் முறையாயினும், இனி வருஞ்சூத்திரங்களான் வேற்றுமைத்தொகை விரிபற்றிய மயக்கமுணர்த்துதலான், ஆண்டுப்படுமுறைமை யுணர்த்து தல் ஈண்டு மியைபுடைத் தென்க" என்று கூறியுள்ளார். இஃது ஆராயத்தக்கது. வேற்றுமைமயங்கியலில் தொகை, தொக, தொகா என்ற சொற்கொண்ட சூத்திரங்கள் ஐந்தே. அவையாவன: 'அதுவென் வேற்றுமை யுயர்திணைத்தொகைவயி, னதுவெ னுருபுகெடக் குகரம் வருமே' (தொல். சொல். 94), 'ஓம்படைக் கிளவிக் கையு மானுந், தாம்பிரி விலவே தொகைவரு காலை' (தொல். சொல். 97), 'குத்தொக வரூஉங் கொடையெதிர் கிளவி, யப்பொரு ளாறற் குரித்து மாகும்' (தொல்.சொல். 99.), 'பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலு, நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப' (தொல். சொல். 104), 'ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்—மெய்யுருபு தொகாஅ விறுதி யான' (தொல். சொல் 105). இச்சூத்திரங்களில் 'ஓம்படைக் கிளவி....' என்னுஞ் சூத்திரத்திலுள்ள தொகை என்னுஞ் சொல்லைத்தவிர, மற்றச்சூத்திரங்களிலுள்ள தொகை, தொக, தொகா என்ற சொற்கள் சமாசனைக் குறிக்கின்றனவா? அல்லவா? என்பதை அவ்வச் சூத்திரத்தின்கீழ்க் கூறுவோம். எவ்வாறாயினும், இவ்வைந்துசூத்திரங்களில் ஒன்றிலாவது வேற்றுமைத் தொகையை விரிக்குமிடத்து வேற்றுமையேயன்றி அன்மொழிப்பொருளொடு புணர்ந்துவரும் எவ்வகைச் சொல்லும் உணர்த்தப்படவில்லை.

ஆதலால், சிவஞானமுனிவர் கூறியுள்ள பொருளே பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

வேற்றுமையியல் முற்றிற்று.

[தொடரும்.]

ஸ்ரீ:

# குருபரம்பரை.

## எம்பெருமானார்வைபவம்.

[௩௧அ-ம் பக்கத்தொடர்ச்சி.]

துய்யமாமலராள்புவிமகளிறைஞ்சத்தொடுகடற்கிடந்துபற்பகலுஞ்
செய்யமாமலர்க்கண்வளரருளாளர்தேவர்கள்தொழுதெழவொருநாள்
வையமாளிகையிலினிதிருந்தருளியரையரைவருகவென்றழைத்திட்
டுய்யமாதவஞ்செய்தோங்கினுய்பாடென்றுரைத்தனரோங்குசீரரையர். ()

மண்ணெலாமுருகக்கல்லெலாமுருகமரங்களும்புற்களுமுருக
விண்ணெலாநிறைந்தவமரருமுருகவிரிஞ்சனுநக்கனுமுருகக்
கண்ணெலாமருவிபாயவிந்திரனுங்கனலுறுமெழுகெனக்கரையப்
பண்ணெலாமெடுத்துப்பாடினாரரையர்பங்கயக்கண்ணனும்மகிழ்ந்தான். ()

பண்டுலகளந்தான்றிருவுளமகிழ்ந்துபாடியவரையரையுவந்து
கொண்டவர்க்குபயசாமரஞ்சிவிகைகோதறுமாடையாபரண
மண்டர்கண்மகிழக்கொடுத்தனனரையராங்கவைகைக்கொளாதலர்ந்த
புண்டரீகக்கட்புரவலாகேளென்றடிதொழுதிவையிவைபுகல்வார். (உஉகூ)

ஒருவனையொருவன்பாடினுவந்தால்வேண்டுவதென்னெனவுரைத்துத்
திருமகடலைவாபாடியபுலவன்செப்பியதளிப்பர்களுலகின்
மருவரும்புகழாயைதுநொய்தாகப்பாடினல்மகிழ்ச்சியற்றவர்கள்
தருவதுபோலத்தந்தனையின்னும்பாடுவேன்றலைவவென்றிசைத்தார். ()

செங்கணுயகனாறிந்தறியார்போற்சீரியபுலவனைநோக்கித்
தங்கியபுகழாயொக்குமின்றெம்பாற்றப்புளதவைபொறுத்திடுக
பொங்குபூங்குழலாடிருமகள்பூமியன்றியெப்பொருளைநீகேட்பா
யுங்கவையுடனுமளிப்பதற்கையமில்லையேதறையெனவறைந்தான் (உ௩க)

•வேறு.

ஆளவிந்தவிளையாழ்வான்றன்னையடியேற்கருளென்னத்
தேனார்கமலத்தாடொழுதாரரையர்திருமாலங்கிங்குத்
தானுயிருந்துழிகச்சவித்துத்தந்தோமென்றாரிருவர்களும்
போனார்சிவிகைமேல்கொண்டப்பூவைவண்ணன்கழல்வணங்கி. (உ௩உ)

ஆடிப்பூரத்தவதரித்த ஆண்டாளருளாலுடையவரைப்
பாடிப்பெற்றோமிளையாழ்வான் றன்னையின்றெம்பரமனுக்கங்
கோடிச்சென்றுசொல்லென்னவொருவன் றன்னைமுனம்விடுத்தார்
தேடிப்பிரமனரன்காணுத்திருமாறாதன்செல்வதன்முன். (௨௩௩)

அரையரிராமாநுசன் றனைக்கொண்டணைகின்றாரின் றவர்க்கெதிரே
நிரைசெய்திடுகநம்மனைத்துக்கொத்துங்கொண்டுநீயென்னத்
திரைசெய்கருணைச்சேனையர்கோன் றனக்குச்சீரார்திருவரங்க
ருரைசெய்தருளவங்குள்ளவனைத்துக்கொத்துமுடன்கூடி. (௨௩௪)

ஆகமெல்லாமானந்தமயமாமாறனருளுடைய
பாகவதர்கள்புடைசூழப்பசும்பொன்றிகழும்பல்லக்கிற்
ருகமோகமற்றிலங்குந்தமர்கடாங்கச்சேனையர்கோன்
மேகவண்ணர்பணித்தபடிவடவாறளவும்விடைகொண்டான். (௨௩௫)

அந்தாமஞ்சீரங்கமதாயரையர்க்கிளையாழ்வார்க்கெதிரே
வந்தார்நித்தர்திரளாகிமற்றையவரேமுத்தர்களாய்ச்
சந்தார்பொழில்சூழ்வடவாறேசாற்றற்கரியவிரசையதாய்
நந்தாவளங்கண்மிகவோங்குஞானமிக்கார்க்கெதிர்கொண்டார். (௨௩௬)

## வேறு.

இப்படியிவர்களெதிர்கொளவெதிகட்கிறைவனையிதயமாமலரிற்
றப்பறவிருத்திமூன்றுதண்டேந்துந்தலைவனுமரையருங்கூரத்
தொப்பருநகரின்மன்னுமாழ்வானுமுடன்வருமுதலியாண்டானுஞ்
செப்பரும்வடவாறதனினீராடித்திருப்பரிவட்டமுஞ்சாத்தி. (௨௩௭)

சீரியகருணைத்துவாதெசநாமஞ்செப்பிநற்றிருமண்காப்பணிந்தங்
கேரியல்மஞ்சட்காப்பணிந்திலங்கவெழிறிகழ்திருமணிவடமும்
கூரியகருணைதிகழ்திருமார்பிற்கோப்புறவணிந்துதென்கரையிற்
றாரியமுழங்கக்கொம்புகாளங்கடுந்துமிகுடமுழவதிர. (௨௩௮)

பேரிகைதாளமத்தளஞ்சின்னம்பேரணிநிரைத்தெதிர்முழங்கக்
கூரியவிழியார்புடைவரவமரர்குலவுநன்மலர்மழைபொழியச்
சீரியகவிஞர்பாணர்களேத்தநச்சேனையர்கோனிணையடியில்
வரியன்மலரிட்டிறைஞ்சினன்புவியிலெதிகளுக்கரசனுமெம்மான் (௨௩௯)

## வேறு.

இடிநிகர்முரசமார்ப்பயாவருமிளையாழ்வாரைப்
படிமிசைவணங்கியேத்தப்பத்தர்கள்பல்லாண்டோதக்
கொடியணிநெடுவானேங்குங்கோபுரங்கண்டுமெண்ணின்
முடியுறத்தாழ்ந்தார்சென்றூர்முறைமுறைதுதிசெய்தேத்த, (௨௪௦)

தண்டார்திகழுந்திருமார்பன்றாமோதரன்கோபுரந்தன்னைக்
கண்டாங்கிறைஞ்சியெழுந்ததற்பின்கண்களிரண்டுங்களிகூர
மண்டான்குழையமுனிவர்தொழமறையோர்புகழவிரைந்தேகி
விண்டானளப்பமிகவோங்கிவிளங்கிக்களங்கம்மேவுகிலா. (௨௪௧)

### வேறு.

திடமுடையமரர்போற்றுந்திட்கொடிமதிளைக்கண்டார்
தடமுடைக்கரங்கள்கூப்பித்தாழ்ந்துறப்பணிந்துள்புக்கார்
படவரவணையதாகிப்பங்கயக்கண்ணன்றன்னோ
டுடனமர்ந்துலகமுய்யவோங்கிளையாழ்வாரானார். (௨௪௨)

### வேறு.

திருமலைதந்தான்வீதியேமுதலாச்சிறந்தசீர்வீதிகடோறும்
பொருவறும்புகழான்வலஞ்செய்தாங்கதனுட்பூசுரர்துதியொடுமேகிக்
குருமணியாயபெரியநம்பியையுங்கோதறுமன்பினாலேத்தி
யிருபதம்வணங்கியவனொடுமேகியிமையவர்மலர்மழைபொழிய. (௨௪௩)

### வேறு.

சந்திரபுட்கரணித்தண்புனலிற்றமரோ
டிந்திரசித்தினைவென்றிட்டவிலக்குவனா
மந்திரவித்தழகார்மஞ்சனமாடியுடன்
செந்துவராடைசெழுந்திருவரையிற்றிகழ. (௨௪௪)

அன்றுபுனைந்தழகாராசறுநற்றிருமண்
ணொன்றலபன்னிருநாமத்துடனொக்கவணிந்
தென்றுமுயிர்க்குதவுமெந்தையுருப்பகையை
வென்றுதிருக்கையினில்வேதவிதிப்படியே. (௨௪௫)

செப்பருமுக்கோலுஞ்சீர்கொள்பவித்திரமும்
ஒப்பறுசெங்கையினிலும்பருமன்புசெயும்
முப்புரிநூன்மார்பன்முத்தியின்வித்தெனுமென்
னப்பனுமன்றுதரித்தன்பருமின்பமுற. (௨௪௬)

கோகனகத்துளபக்கோமளமாமணியும்
மாகனகத்தொளிருமார்பிலணிந்தசுரா
னுகநகத்திரளாலள்ளியவொள்ளியனை
மேகநகத்துருவாம்வேதபரம்பரனை. (௨௪௭)

உன்னிநடந்துபலிப்பீடமுமுள்ளுறையும்
பொன்னினிலங்கியசெம்பொற்கொடிமாமரமும்

மன்னுதலங்களினும்வந்துபணிந்தழகார்
அன்னமுமாமையுமாமழகியமணவாளன். (௨௪௮)

மண்டபமெய்திடலும்வந்தவரெதிர்கொளவன்
றண்டர்தொழுங்குருகூர்மாறனைறந்தமைபோற்
புண்டரிகத்திருமால்பூசுரர்கைத்தலமேற்
கொண்டெதிரெய்திடநங்கோதறுபூதூரில். (௨௪௯)

வந்துபிறந்தவருமாதவனாருளிற்
சிந்தைகரைந்துருகிச்சென்றுநமோநமவென்
றந்தமுமாதியுமில்லாதவனைப்புவியின்
முந்தவணங்கினரம்முதலியுமாழ்வானும். (௨௫௦)

அப்படியேபடிமீதச்சுதனைப்பணியச்
செப்பருமெம்பெருமானார்வளர்சென்னியின்மேற்
றப்பறநம்பெருமாள்வைத்தனர்தாமரைதா
ளெனப்பெனவன்றெனவாழொள்ளியசேவடியை, (௨௫௧)

மண்டியகாதலொடுமண்ணில்வணங்கியெழுந்
தண்டர்களும்புகழுமச்சுதனைப்பழைய
தொண்டரடிப்பொடிநற்சொற்படியேயழகார்
புண்டரிகப்பதமும்பொன்முடியும்வடிவும். (௨௫௨)

**வேறு.**

ஆசறப்பூண்டுபுல்லியனுபவித்தாளவந்தா
ரீசனேபெரியநம்பியிதயமேயளவிலாத
பாசமாக்கடலுளைவாய்ப்பாம்பினுற்பதைப்புண்டோய்ந்த
நீசனேன்றன்னைக்காத்தநின்மலாசரணமென்ன. (௨௫௩)

பின்னையும்பணிந்தாநந்தப்பெருங்கடற்சுழியிற்சூழ்ந்து
தன்னையும்மறந்துநின்றதொண்டரைத்தலைவர்நோக்கி
முன்னைநான்மறைகள்வல்லாய்முழங்குநீர்சூழ்ந்தமண்ணும்
மின்னொளிவிசும்புநஞ்சேர்விபூதிகளிரண்டுமின்றே. (௨௫௪)

பொதுவறத்தந்தோநீரிப்பொற்புறுநமதுவீட்டி
லிதுவதுவுதுவெனுதேயாவையுந்துறைகடோறுங்
கதுமெனநோக்கிமற்றக்காரியமனைத்துங்காண்பீர்
முதுமொழிமறைகள்வல்லீரென்றிவைமுகுந்தன்கூற. (௨௫௫)

**வேறு.**

உற்றவடியாரெங்குறினுமுணர்தற்கரியபரமபத
மற்றையவர்கள்கையதுவாமென்னமாறன்வகுத்தபடி

கற்றபூதூரிலையாழ்வான்கையினெல்லிக்கனியென்னப்
பெற்றவிபூதித்துயங்களையும்பேதமின்றியுறநோக்கி. (௨௬௬)

## வேறு.

விரிபொழில்சூழரங்கத்திட்டமர்களொடும்வீற்றிருக்கும்
பெரியநம்பிமுகநோக்கிப்பேதையேற்குனக்காக
வரியரவிலுலகனைத்தும்வயிற்றொடுக்கிக்கண்வளரும்
கரியமுகிலனைத்திணையுங்காட்டிடநான்கண்டொழிந்தேன். (௨௬௭)

பெரியார்க்காட்பட்டக்காற்பெறுதபயனென்றளதோ
அரியானேயெனவுரைத்தன்றவனடியிலுறவிறைஞ்சத்
தெரியாதகலையனைத்தும்யாவர்கட்குந்தெளிந்துணர்த்தும்
விரியாநின்றொளிர்கருணைப்பெரியநம்பிவிளம்பிவான். (௨௬௮)

## வேறு.

கண்டுகொண்மின்பின்னடையக்கலியுங்கெடுமென்றருண்மாறன்
பண்டுபகர்ந்தானப்படியேயானவந்தார்பார்வையினற்
றெண்டருய்யும்படிநீயுந்துறந்துபெற்றவிச்செல்வம்
உண்டுகொல்லோவுனக்கல்லாலொருவற்கென்னவுகப்போடும். (௨௬௯)

அரியகுரவனிவையருளவவரைவணங்கியன்பரொடும்
பெரியதிருமண்டபஞ்செறிந்துபேரோலக்கமாயிருந்து
தெரியவரியநம்பெருமான்சிகாரியங்களனைத்தினையும்
உரியமுறையாலாராயப்புக்கானெதிகட்குயிரானுன். (௨௭௦)

## வேறு.

வருகூரத்தாழ்வானுமருமகனுமுதலிகளுங்
குருகூரன்றிருவருளுமுடன்மன்னக்கொழுந்தவத்தால்
அருகூரும்புனற்பொன்னியம்மான்முன்னமைத்தபடி
கருகூலத்தறைபலவுந்திறப்பித்தான்கருணையினுன். (௨௭௧)

## வேறு.

சீர்கொண்மாணிக்கப்படியனைத்தினையுந்திருந்துறநோக்கிமற்றதற்பின்
வார்கொணித்திலத்தின்படியெலாநோக்கியிசைத்தநற்பவளத்தின்படியும்
நேர்பெறநோக்கிமரகதப்படியுநீடொளிவயிரத்தின்படியும்
பாருறுபுகழாநீலத்தின்படியும்பகருங்கோமேதகப்படியும். (௨௭௨)

ஆங்கதற்பின்புபற்பராகத்தினழகுறுபடியெலாநோக்கிப்
பாங்குறும்வயிடூரியப்படிநோக்கிப்பசும்பொனின்படியனைத்தினையும்

ஒங்கியபுகழானேக்கிமற்றதனிலுறுமறுவகற்றிநம்பெருமாள்
தாங்குசீராமனேத்தையுமுன்போலிருந்தவத்தலங்களிலமைத்தே. (௨௬௩)

## வேறு.

திருப்பரிவட்டவர்க்கஞ்சிறந்தபட்டாடைமுற்றும்
விருப்பொடுநோக்கிச்சல்விசவர்முனவிரிஞ்சநாளி?
விருப்பவையனைத்துநோக்கியெலையறும்பொன்னிற்செய்த
வுருக்களினெடையுமாற்றுமுள்ளவாறுவந்துநோக்கி. (௨௬௪)

## வேறு.

எண்ணியவேந்தரிக்குவாவாதியிராகவன்வரையினிலுள்ள
புண்ணியம்போன்றாரங்கனுக்களித்தபொருவறுமாபரணங்கள்
விண்ணமரிரவியொளியினபலவுமிக்குளபலபலபொருளுங்
கண்ணுறநோக்கிச்சீர்பெறவிளக்கியமைத்தனன்காவலரிடத்தில். (௨௬௫)

## வேறு.

மற்றதற்பினமுதுபடிமணிவிளக்குத்திருமாலை
யுற்றதுறைதுறைதோறுமுறநோக்கியனைத்தினையுங்
கற்றவர்கள்புகழ்ந்தேத்தக்கலாதிசெயுமைம்புலனு
மற்றவனுங்கத்தூரிசந்தனமாங்கதற்கிசைந்த. (௨௬௬)

## வேறு.

கலவைகள்பலவும்விழிகளானேக்கிக்கண்டதிற்றீமைகள்கடிந்து
நலமுறவிலங்குமண்டபம்பலவுநாடிமற்றவைபுதுக்கிடுவான்
செலவுகள்கொடுத்துத்திருமடைப்பள்ளியனைத்தையுந்திருந்துறநோக்கிப்
புலவர்கள்பெருமான்புதுக்குவித்ததற்பின்பொற்புறுதிருமதிண்முழுதும் ()

நோக்கிமற்றவற்றிற்பழகினபுதுக்கிநோன்பின்மிக்கவர்வரமிகுந்த
பாக்கியமுடையார்செய்தகோபுரங்கள்பலவுநல்விழிகளாற்பார்த்தங்
காக்கியவுருவிலழிந்தவைசமைத்தன்றலங்கரித்ததன்புறத்தலர்ந்த
பூக்குடைந்தாடிவண்டினமுராலும்பொழில்கள்பூம்பொய்கைகள்பலவும். ()

செண்பகந்துளபமல்லிகையலரிமுதலியதிருநந்தவனங்க
ளெண்படுபலவுநோக்கிமற்றதனுளின்னல்களகற்றியங்கதற்பின்
விண்பகர்கானம்மானுடர்கானம்வீணையில்யாழினிலிசையும்
பண்பகர்பாணர்கவிஞரேமுதலாப்பலபலவாச்சியம்வல்லோர். (௨௬௯)

ஆதியாமனைத்துந்துறைதுறைதோறுமாசறநோக்கிமெய்யன்பாற்
சோதியாதவைகளனைத்தையும்புகுந்துதுறைதொறுஞ்சோதனைபண்ணித்

பேதியாதருளினின் றவர்கிற்கப்பிறர்களேமுனிந்தறவகற்றி
நீதியாய்நின்றவன்பரையகன்றூர்நின்றவத்துறைதொறுநிறுத்தி. (உஎ0)

வேறு.

சீரொத்திலங்குமெதிராசன்சிந்தையென்னவுடனமரும்
கூரத்தாழ்வான்றனைநோக்கிக்குடும்பம்பிரிந்திங்கிருத்தல்பிழை
நீரத்தலத்திலெழுந்தருளிநெடுமாற்குறையுளாய்விளங்கும்
பாரொத்திலங்கும்பொறையாண்டாளென்னுமந்தப்பைந்தொடியை. ()

சென்றுகொணர்வீரெனவருளித்திருமாற்கினியாராங்கிருப்ப
நன்றென்றிறைஞ்சியாழ்வானுஞானமிக்கான்றன்னையிளங்
கன்றுபிரிந்தகற்றுப்போற்பிரிந்துகடுப்பின்விரைந்தேகிச்
சென்றுகூரநகர்புக்குத்திருவைபனையநயிச்சியத்தால். (உஎஉ)

ஆண்டாளன்றிமற்றனைத்துமறிவிற்றுறந்தங்கவளோடு
மீண்டானுழ்வானுண்டாளும்விட்டாளனைத்துங்கணவனுக்காத்
தூண்டாவிளக்கேயனையாளுந்துலங்குசெம்பொற்சுடர்வள்ளந்
தீண்டாவுளத்தாடிருமடியிற்செறிவித்தவன்றன்பின்சென்றாள். (உஎஙு)

கல்லுமாமும்பறவைகளுங்கானில்விலங்குங்கானத்திற்
புல்லுங்குழையவநுபூதிப்பொருளுங்குழையநால்வேதச்
சொல்லுங்குழையமெய்குழையத்கோகையனையாள்பின்றெடா
அல்லும்பகலுநடந்தாழ்வானமரேத்தவருநெறியில். (உஎச)

கள்ளருளர்கொலிந்நெறியிலென்னவாண்டாள்கலங்கியரு
ளுள்ளமுடையார்க்குரைப்பவவருண்டோசிலகொணர்ந்ததென
வெள்ளங்கோலிநீர்தகைத்தாலளிப்பான்விளங்குபசும்பொன்னின்
வள்ளமொன்றுகொணர்ந்தேனென்றுரைத்தாள்கேட்டமதிமிக்கான். ()

பெருகநகைத்துப்பயந்தீர்ப்பென்பேதாய்தருதியெனவாங்கி
அருகினின்றசெடிமூட்டிலச்சங்கொடுத்தீரகலுமென
வொருவர்க்காகும்படிபோட்டங்குள்ளந்தூயாடனைநோக்கி
வெருவப்பண்ணுமச்சமினமூளதோசொல்லாய்மெல்லியலே. (உஎகூ)

என்றானண்டாளச்சமெலாமிருந்தவள்ளத்துடன்போய்த்துக்
குன்றுநிலையாயெனப்பணிந்துகும்பிட்டெழுந்தாளவளோடுஞ்
சென்றானழ்வான்றென்றிசைமேற்செழுநீரிலங்கையரக்கர்களை
வென்றான்கிடந்துகண்வளரும்விரையார்பொழில்சூழரங்கத்தில். (உஎஎ)

வேறு.

ஆங்கமருஞ்பாகவதரனைவர்களுமாழ்வான்றன்
பூங்கழற்கீழ்ப்பணியவந்தப்பூசுரர்கள்பதங்களினும்

பாங்குடனேதேவியொடும்பணிந்தேத்திருக்கோலும்
தாங்கியசீரெதிராசன்சரண்பணிந்தான்றையலொடும். (௨௭௮)

## வேறு.

அடிமிசைப்பணிந்தகூரத்தாழ்வானையாவியோடழுந்துறத்தழுவித்
துடியிடைதன்னைத்தன்னையீன்றெடுத்தசுரிகுழற்றிருவெனநினைந்து
முடிகுடதிசையில்வைத்தினிதுறங்குமுகுந்தனாரின்னருளமரும்
வடிவினையாண்டாளிதயமாமலரின்மன்னுவித்திடும்படிபண்ணி. (௨௭௯)

மற்றையாழ்வானுமுதலியாண்டானுமாசறுதொண்டர்கள்பலரும்
உற்றுடனமாத்தெரிசனார்த்தத்தினுறுதிகள்பலபலவுணர்த்திக்
கற்றமாதவருங்கருணைமாதவனுங்கண்ணினுண்மணியெனக்கருதப்
பற்றெலாமறுத்தவெதிகளுக்கதிபன்பரிவொடும்ரங்கமாநகரில். (௨௮0)

## வேறு.

ஏவருமகிழ்வுற்றேத்தவினிதமர்கின்றநாளில்
மேவரும்பெரியநம்பிவிரைப்பதம்வணங்கியோர்நாட்
டேவரீரடியேனுக்குச்சீரருளாளவந்தார்
பூவடிவணங்காத்துன்பம்போக்கினீர்புவிமேலின்னும். (௨௮௧)

திருவுளத்தமரப்பட்டசீரியபரமார்த்தங்கள்
குருபராவுள்ளதெல்லாங்கூறிடவேண்டுமென்றாங்
கிருபதம்வணங்கிநின்றாரெம்பெருமானார்நம்பி
யொருபொருளின்றிமுற்றுமுரைத்தவர்க்குரைப்பார்பின்னும். ()

மாசிலாநிலையினாலேவல்வினையேனையாண்ட
தேசிகாளவந்தார்செப்பியதனைத்துஞ்சொன்னேன்
பேசுமோருண்மைமுன்பேதிருக்கோட்டிநம்பிபெற்றா
னீசனேன்பெறுநாடன்னிலாளவந்தார்பானீயும். (௨௮௩)

சென்றதையன்பாற்கேட்டுச்சீரியோயுய்தியென்ன
வன்றருட்பெரியநம்பியருள்செயவவரைமுக்கோ
லொன்றியகருணைமிக்கவுடையவர்வலஞ்செய்தேத்தி
நன்றிசேர்மனத்துள்வைத்துநான்மறைதுதிப்பமீண்டே. (௨௮௪)

சீரமர்தொண்டரோடுந்திருக்கோட்டியூரைநோக்கி
யார்வம்வந்துருகுஞ்சிந்தையாளவந்தாரும்பண்டே
யோரொருதலத்தில்வைத்தவுறுதியைநினைந்துணைந்து
பார்மிசையிலங்குசெம்பொற்பல்லக்கின்மீதராகி, (௨௮௫)

### வேறு.

திருவரங்கநகர்நீங்கித்திருக்கோட்டியூர்நம்பி
மருவுதிருக்கோட்டியூர்வளநகரின்றிசைநோக்கிப்
பொருவறுஞ்சீர்ப்பாகவதர்புடைசூழவடையலர்கள்
கருவழியத்திருச்சின்னங்காளங்கள்கலந்திசைப்ப. (உஅசு)

### வேறு.

சென்றருளிளையாழ்வாருந்திருக்கோட்டியூரின்மன்னி
யன்றதிலுறையுமாயனடிதொழுதன்பின்வாரி
யென்றெழுநம்பிசெம்பொற்கழறொழுதெழுந்தோர்பாங்கில்
நின்றனன்ஞானானந்தநீடொளிப்பரிதியொத்தான். (உஅஎ)

சீரியனிவனுநிற்பத்திருக்கோட்டிநம்பியென்னுந்
தாரியன்மார்பர்நின்றதலைவரைமுகத்தைநோக்கா
ராரிவரென்னாரெவ்வூரமர்வதுநம்பால்வந்த
காரியமென்கொலென்னார்கண்டுகண்கண்டிலார்போல். (உஅஅ)

இருந்துதன்றிருவோலக்கத்திருந்தமெய்த்தொண்டரோடுந்
திருந்துநன்மொழிகள்கூறிச்சிலபலகடிகைவைகிப்
பொருந்துதம்மனையுட்போனார்சீபெரும்பூதூரானும்
வருந்திமற்றவர்பின்சென்றுவணங்கியுண்மறுகிமீண்டே. (உஅகூ)

தன்செயலழிந்துமற்றோர்தலத்தினிலமர்ந்துநானு
முன்செய்தவினைகட்கெல்லாமுடிவிலாவாறுகண்டே
னென்செய்தேனென்னா........னிவனுடைநிலைமைக்கென்னப்
பொன்செய்தார்மார்பனன்றைப்பொழுதெலாம்புலவரோடும், (உகூ0)

### வேறு.

எண்ணியிரங்கிமற்றைநாளேத்துநம்பிதிருமுன்பில்
நண்ணிவணங்கியடியேற்குநாதாவிரங்கவேண்டுமென
மண்ணினுள்ளோர்கண்டிரங்கநின்றான்மறைகளெடுத்தேத்தும்
புண்ணியத்தின்கொழுந்தனையநம்பியர்தப்புங்கவனை. (உகூக)

ஒன்றுமனுவின்றனையளவுமதியாதிருந்தவுத்தமனு
மன்றும்பகவற்கலியாணவநந்தாநந்தத்திறங்கூறிச்
சென்றுசெறிந்ததொண்டரொடுந்திருமாளிகையிற்போய்ப்புகுந்தா
னின்றுவருந்தியிளையாழ்வார்நெடுமாறொண்டர்பின்சென்றே. (உகூஉ)

திருந்தவணங்கிமனையளவுஞ்சென்றுமீண்டுதாமுனைநா
ளிருந்ததலத்திற்போயிருந்தாரிவணநாள்கள்பலசெல்லப்
பொருந்தியொருநாட்டிருக்கோட்டிநம்பிபோவாவென்னுமல்
வருந்தியின்னுமொருநாளாமென்னவெண்ணிமாசில்லா. (௨௩௩)

வேறு.

தொண்டர்களோடுமீண்டுதுகளறுமிளையாழ்வாரும்
வண்டினமூாலுஞ்சோலைமதிட்டிருவரங்கம்புக்கார்
அண்டரண்டத்தின்மண்ணிலாசைகளெட்டில்வேத
முண்டெனவுரைக்கப்பட்டவுத்தமர்தன்னின்மேலாம். (௨௩௪)

வேறு.

தெருளுமிளையாழ்வார்க்குமுனந்திருமால்பார்த்தன்றிருச்செவியி
லருளுஞ்சரமச்சுலோகத்துக்கதிகாரம்போதாதென்னப்
பொருளின்றுரைசேர்திருக்கோட்டிநம்பியிகழப்போந்தனன்போ
யிருள்சேருலகத்ததிகாரத்தெல்லைகாண்பாரினியெவரே. (௨௩௫)

ஆசாரியனைப்பிரிந்திருப்பாரென்றுரைக்குமத்திறத்தைத்
தேசார்சிந்தைத்தேவாரியாண்டான்காட்டித்தெளிவித்தான்
வாசாகன்மமனமொத்துமந்திரத்தின்வழிநிற்பார்
பேசாநின்றமூவுலகிலின்மைநம்பிபிறப்பித்தான். (௨௩௬)

வேறு.

உத்தமகுணத்தாரயவுடையவர்க்கதிகாரந்தா
னித்தலத்தில்லையென்னவிகழ்ந்தனனம்பியென்றால்
நித்தரிலொருவர்க்கில்லாநிலைவொடுகெம்பியர்தோ
வெத்திறமிருந்தான்மண்ணில்யாரவன்பெருமைதேர்வார். (௨௩௭)

தேசுறுகுரவர்தம்மிற்றிருக்கோட்டிநம்பிக்கொத்தார்
ஆசறுமூலகர்தன்னிலாருளரறிவானோக்கில்
நீசனேன்கண்டவிந்தநீணிலத்தில்லையில்லைப்
பேசினுமாவிகூசும்பிறிதினியுரைப்பதென்னே. (௨௩௮)

[தொடரும்.]

உதவிப்பத்திராதிபர்.

உ

# கவியின்பம்.

(௨௯௮-ம் பக்கத்தொடர்ச்சி)

இனிப் பொருள்களைப் புனைந்துரைக்கும் உரையை இயற்கைப் புனைந்துரையும் செயற்கைப்புனைந்துரையு மென இரண்டாக வகுக்க லாம். அவற்றுள், இயற்கைப்புனைந்துரையாவது பொருள்களின் இயல்பை அம்முறை பிறழ்வின்றிக் காட்டவல்ல சொற்களானே புனைந்து கூறுதலாம். இயற்கை இயல்பு தன்மை என்பன ஒருபொருட்கிளவி. இப்புனைந்துரையை அணிநூலார் தன்மைநவிற்சி யென்பர். இப்புனைந் துரையானே சங்கப்புலவர்கள் பெரிதுங் கவி யாத்துள்ளார்கள். அவற்றுட் சில காட்டுதும்.

"அண்ணாந்தேந்திய வனமுலை" என்னும் நற்றிணைச்செய்யுளின் இம் முதலடி இயற்கைப்புனைந்துரையாகும். இவ்வடியில்வரும் அண்ணாத்தல், ஏந்துதல் என்னும் இருசொற்களும் முலையினுடைய நிமிர்ச்சியையும், தளர்ச்சியின்மையையும் காட்டி அத னிளமையை உணர்த்து மாற்றலுடையவாய் அமைந்து அதனியல்பைப் புனைந்து நிற்றல் காண்க. வனம் என்னுஞ் சொல்லும் இளமைச்செவ்வியி னமைந்த அதன் அழகைக் காட்டிநின்றது. இவ்வாறே இளைய தனத்தி னியல்பை யாம் கண்ணாற்கண்டாற்போலத் தங் கவியிலும் காணுமாறு காட்டவல்ல சொற்களை யமைத்துச் செய்த ஆசிரியருடைய கவித்துவம் எவ்வளவு வியக்கத்தக்கது.

இன்னும்,

"கானவிருப்பைவேனில்வெண்பூ
வளிபொருநெடுஞ்சினையுஞற்றலின் ஆர்கழல்பு
களிறுவழங்குசிறுநெறிபுதையத்தாஅம்
பிறங்குமலையருஞ்சுரமிறந்தவர்ப்படர்ந்து
பயிலிருணடுநாட்டுயிலரிதாகித்
தெண்ணீர்நிகர்மலர்புரையு
நன்மலர்மழைக்கணிற்கெளியவாற்பனியே"

என்னும் இக்குறுந்தொகைச்செய்யுளில் இருப்பை காட்டிறபிறக்குங் கருப்பொருள் என்பதையும், அது வேனிற்காலத்துப் பூக்குமியல்

பிணையுடைய தென்பதையும், அதன் பூ வெண்ணிறமுடையதென்பதையும் அப் பூ தன்னைத் தாங்கும் தாளிலுள்ள ஆரில் அமைந்திருக்குமியல்பையும், அது கீழே விழுங்கால் அவ்வாரினின்றுங் கழன்று வீழுந்தன்மையையும், அப் பூ பலவாக நெருங்க வீழ்ந்து வழி மறையவும் மரத்தின்கீழுள்ள நிலத்தை மறைத்துக்கிடக்குமியல்பையும், நாம் அனுபவித்துணர்ந்தாற்போல உணருமாறு உணர்த்தவல்ல சொற்களானே "கான விருப்பை வேனில் வெண்பூ" எனவும், "ஆர்கழல்பு" எனவும், "நெறிபுதைய" எனவும், ஆசிரியர் அமைத்துக்காட்டியனவும் மிக இன்பந்தரும் அப் புனைந்துரையேயாம்.

இன்னும்,

"அவரோவாரார்முல்லையும்பூத்தன
பறியுடைக்கையர்மறியினத்தொழியப்
பாலொடுவந்துகூழொடுபெயரும்
யாடுடையிடைமகன்சென்னிச்
சூடியவெல்லாஞ்சிறுபசுமுகையே"

என்னும் இக் குறுந்தொகைச்செய்யுளில் இடையர்கள் ஆட்டுக் குணவாகும் குழைமுதலியவற்றை யிடுதற்காகப் பறியைக் கையிற்கொண்டு திரியுமியல்பையும், அவர்கள் ஆட்டினங்களை மேய்க்கக் காடுகளிற் கொண்டுசெல்லுமியல்பையும், மேய்க்கச் செல்லும்போது பாலைக்கறந்து தத்தம் புதல்வரிடங் கொடுக்க அவர்கள் அப் பாலைக்கொண்டு தம் வீட்டிற்கு வந்து தத்தந் தாய்மாரிடங் கொடுத்துவிட்டு அவர்கள் கொடுத்த உணவை மேய்க்கச்சென்ற தத்தந் தந்தையர்க்குக் கொண்டுசெல்லுமியல்பையும், செல்லும்போது அவர்கள் முல்லையின் பசிய சிற்றரும்புகளைப் பறித்துத் தந் தலையிற் சூடிக்கொண்டுசெல்லுமியல்பையும், அவற்றை யுணர்த்தவல்லசொற்களானமைத்து, "பறியுடைக்கையர்" எனவும், "மறியினத்தொழிய" எனவும், "பாலொடுவந்துகூழொடு பெயரும் யாடுடையிடைமகன்" எனவும், "சென்னிச் சூடியவெல்லாஞ் சிறுபசுமுகையே" எனவும் கூறியிருப்பனவும் மிக இன்பந்தரும் அப் புனைந்துரையேயாம். சிறுபசுமுகை யென்பது முகையின் பருவந் தோன்ற நின்றது.

இன்னும்,

"களவும்புளித்தனவிளவும்பழுநின
சிறுதலைத்துருவின்பழுப்புறுவிளைதயி

ரிதைப்புனவரகினைவைப்புமாணரிசியொடு
கார்வாய்த்தொழிந்தவீர்வாய்ப்புற்றத்
தீயல்பெய்தட்டவின்புளிவெஞ்சோறு
சேதான்வெண்ணெய்வெம்புறத்துருக
விளையாருந்தப்பின்றைநீயு
மிடுமுள்வேலிமுடக்காற்பந்தர்ப்
புதுக்கலத்தன்னசெவ்வாய்ச்சிற்றிற்
புனையிருங்கதுப்பினின்மனையோளயரப்
பாலுடையடிசிறெருடீஇயவொருநாண்
மாவண்டோன்றல்வந்தனைசென்மோ
காடுறையிடையன்யாடுதலைப்பெயர்க்கு
மடிவிடுவீளைவெரீஇக்குறுமுயன்
மன்றவிரும்புதலொளிக்கும்
பன்புலவைப்பினெஞ்சிறுநல்லூரே"

என்னும், இவ் வகநானூற்றுச் செய்புளில் முல்லைநிலத்திலுள்ளார் ஆட்டினுடைய பழுப்புநிறமமைந்த முற்றிய தயிரையும், வரகரிசிச்சோற்றையும் உண்ணு மியல்பையும், சோறடுங்கால் வரகரிசியோடு ஈயல் பெய்தும், புளிப்பெய்தும் அடு மியல்பையும், அச்சோற்றை யுண்ணுங்காற் சுடுசோற்றின்மேற் பசுவெண்ணெயை உருக இட்டு உண்ணு மியல்பையும், இடையன் மேயும் ஆடுகளைத் துரத்துதற்கு இதழை மடித்துச் சீழ்க்கைவிடு மியல்பையும், அச்சீழ்க்கைக்கு வெருவிக் குறுமுயல் பற்றையில் ஒளிக்கு மியல்பையும் நா முணருமாறு, அவற்றை யுணர்த்தவல்லசொற்களானமைத்துச் "சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயிர்—இதைப்புனவரகி னவைப்புமா ணரிசியொடு" எனவும், 'ஈயல்பெய் தட்ட இன்புளி வெண்சோறு' எனவும், "சேதான்வெண்ணெய் வெம்புறத் துருக" எனவும், "காடுறை யிடையன் யாடுதலைப் பெயர்க்கும் மடிவிடு வீளை" எனவும், "வெரீஇக் குறுமுயல் மன்ற இரும்புதல் ஒளிக்கும்" எனவும் கூறியிருப்பனவும் இன்னும் இதனுள் இவைபோல்வரும் ஏனையவும் மிக இன்பந்தரும் அப் புனைந்துரையேயாம்.

இன்னும், "தாழ்பெருந் தடக்கை தலைஇக் கானத்து" என்னும் அகநானூற்றுச்செய்யுளில், இரவிலே தினையை மேயும்படி வந்த யானைக்கூட்டங்கள் இரிந்தோடும்படி உயரத்திலிருந்து அத்தினையைக் காப்போன் கல்லைவைத்து வீசி எறிந்த கவணின்கட்பிறந்த மிக்க

வெடியோசை யொல்லென்றொலிக்க அதனாற் புலி யுறும யானை பிளிற மயி லேங்க அம் மலையிலுள்ள உயிர்களெல்லாம் வெருவுமியல்பை அவ் வாறமைத்து,

"கனைமழைபொழிந்தகான்மடியிரவில்
தினைமேயானையினனிரிந்தோடக்
கல்லுயர்கழுத்திற்சேணோனெறிந்த
வல்வாய்க்கவணின்கடுவெடியொல்லென
மறப்புலியுரறவாரணங்கதற
நனவுறுகட்சிநன்மயிலால
மலையுடன்வெரூஉம்"

எனக் காட்டிய அடிகளும் மிக இன்பந்தரு மப் புனைந்துரையேயாம்.

இன்னும்,

"மையறவிளங்கியமணிமருளவ்வாய்தன்
மெய்பெறுமழலையின்விளங்குபூணனைதரப்
பொலம்பிறையுட்டாழ்ந்தபுனைவினையுருள்கல
னலம்பெறுகமழ்சென்னிநகையொடுதுயல்வர
வுருவெஞ்சாதிடைக்காட்டுமுடைகழலந்துகி
லரிபொலிகிண்கிணியார்ப்போவாவடிதட்பப்
பாலோடலர்ந்தமுலைமறந்துமுற்றத்துக்
கால்வறேர்கையினியக்கிநடைபயிற்று
வாலமர்செல்வனணிசால்பெருவிறல்
போலவருமென்னுயிர்"

என்னும், இக் கலித்தொகைச்செய்யுளடிகளில் ஒரு சிறுவன் எழுத்து வடிவுபெறாத மழலைச்சொற்களைக் கூறு மியல்பையும், கூறுங்கால் வாய்நீர் ஒழுகிப் பூணை நனைத்தலைச்செய்யு மியல்பையும், அவன் தான் உடுத்த துகில் கழன்று சதங்கையொலிக்குமடியைத் தடுக்கவும் தலையிலணிந்த பிறையுட்சேர்த்த முத்துவடத்தோடு நெற்றியிலே யணிந்த சுட்டி விளக்கத்தோடே அசையவும் உண்ணும் பாலையும் மறந்து தேரைக் கையாலே செலுத்தி நடத்தலைப்பழகு மியல்பையும், நாம் கண்ணாற்கண்டாற்போலக் காணுமாறு உணர்த்தவல்ல சொற்களானே அமைத்திருப்பதும் மிக இன்பந்தரு மப் புனைந்துரையேயாம்.

இனிச் செயற்கைப்புனைந்துரையாவது அப்பொருள்களினியல்பை வேறு பொருள்களின் இயல்பு முதலியவற்றாற் புனைந்து சொல்லுதல். இப்

புனைந்துரையை அணிநூலார் உவமையணி முதலியனவாக வகுத்துக் கூறுவர். அவற்றையெல்லாம் அவ் வணிநூல் நோக்கி யுணர்க. சங்கச் சான்றோரும் உவமைமுதலிய சில அணிகளை அமைத்துக் கவிகள் யாத்துள்ளனர். அதனை அவர்கள் கவி நோக்கி யுணர்க. உதாரணமாகச் சில காட்டுதும்.

"அண்ணாந்தேந்திய வனமுலைதளரினும்" என்னும் நற்றிணைச் செய்யுளுள், மேனியின் நிறத்தை யுணர்த்துதற்குப் பொன்னையும், அம் மேனியிற் றாழ்ந்துகிடக்கின்ற கூந்தலின் நிறத்தைக் காட்டுதற்கு நீலமணியையும் உவமை புணர்த்தி, "பொன்னேர்மேனி மணியிற்றாழ்ந்த நன்னெடுங் கூந்தல்" எனக் கூறியது செயற்கைப்புனைந்துரையேயாம். இதுவும் அவ் வியற்கைப்புனைந்துரைபோல இன்பந்தருதல் காண்க.

இன்னும், "வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழல்" என்னும் அகநானூற்றுச்செய்யுளில் நாரினையுடைய முருங்கையின் வெள்ளிய பழம்பூக்களைச் சூறைக்காற்று மேலாக அள்ளிக்கொண்டு செல்ல அப் பூக்கள் அக்காற்றால் வாருண்டு திரைகளின் பிதிர்வைப் போலப் பொலிதலாற் கடல்போல் விளங்குதலையுடைய காட்டினியல்பை அவ்வாறே யமைத்து,

"நாரின்முருங்கைநவிரல்வான்பூ
சூரலங்கடுவளியெடுப்பவாருற்
றுடைதிரைப்பிதிர்விற்பொங்கிமுன்
கடல்போற்றோன்றலகாடிறந்தோரே"

எனக் கூறியதும் மிக இன்பந்தரும் அப் புனைந்துரையேயாம்.

சிலர் இயற்கைப்புனைந்துரையே இன்பந்தரும்; செயற்கைப்புனைந்துரை இன்பந்தாராதென்பர். அவ ரறியார். என்னை? பொருளினியல்பைச் செயற்கைப்புனைந்துரையும் சிறப்பித்து இன்பந்தருதல் கண்கூடாதலின் பாலுக்குக் கற்கண்டு முதலியனவும், பொன்னுக்கு மாணிக்க முதலியனவும், இளந்தென்றலுக்குத் தண்ணீர்படிதன் முதலியனவும், கண்டப்பாடலுக்கு யாழ்ப்பாடன் முதலியனவும், சந்தனத்துக்குக் கஸ்தூரி முதலியனவும் முறையே ஐம்புலன்களானுகர்த் துய்க்கும் சுவை முதலியவற்றை மிகுவித்துநிற்றல் கண்கூடாக அறியப்படுதலினாலும் இயற்கையறிவைச் செயற்கையறிவும் அழகுசெய்துநிற்றலானும் இயற்கையைச் செயற்கை அழகுசெய்யுமென்ப தறியப்படும்.

இயற்கைப்புனைந்துரைபோலச் செயற்கைப்புனைந்துரையும் சிறப்புடையதென்பது செந்நிறமான இந்திரகோபங்கள் பரந்தன எனக் கூறும் இயற்கைப்புனைந்துரையும், தம்பலப்பிதிர்வென இந்திரகோபங்கள் பரந்தன எனக் கூறும் செயற்கைப்புனைந்துரையும் ஒத்த இன்பமளித்தலான் அறியப்படும். ஈண்டுச் செயற்கையே சிறந்ததென்பாரும் உளர்.

இன்னும்,

"அறைகழற்சிலைக்குன்றவாகன்புனங்காவற்
பறையெடுத்தொருகடுவனின்றடிப்பதுபாராய்
பிறையையெட்டினள்பிடித்திதற்கிதுபிழையென்னக்
கறைதுடைக்குறும்பேதையோர்கொடிச்சியைக்காணாய்"

என்னும், இவ் விராமாவதாரச்செய்யுளில், முன்னையிரண்டடியாற்கூறிய இயற்கைப்புனைந்துரையும் பின்னிரண்டடியாற் கூறிய செயற்கைப்புனைந்துரையும் சொல்லினும்பொருளினுஞ் சுவைப்பட்டு ஒத்த இன்பந்தருதல் காண்க. இவற்றுட் பின்னையது உலகொழுக்கிறந்த புனைந்துரையாயினும், குன்றினுயர்வையும் பெண்ணின் பேதைமையையுஞ் சிறப்பித்து இன்பந் தருதல் மிகப் பாராட்டத்தக்கது.

இன்னும், தற்காலப்புலவர்கள் செய்த நூல்களுள் "உலகியல் விளக்க" மென்னும் நூற் கவிகளும் இயற்கைப்புனைந்துரை பெரிதும் செயற்கைப்புனைந்துரை சிறிதுமாக விரவி விளங்குகின்றன. அவற்றுள்ளும் சில காட்டுதும்.

"வான்படர் மானெலா நிலன்படர் தகைசெய்" என்னும் செய்யுளுள், மலைகளின்மேல் நெல்வயல்கள் சதுரம் முக்கோணம் முதலிய வடிவோடு சிறியவும் பெரியவும் ஆகி விளங்கு மியல்பை,

"பல்வேறுவடிவிற்சிறியவும்பெரியவு
மாகிவிளங்குமந்நெல்வயலாட்சியும்"

என அவற்றை உணர்த்தவல்லசொற்களாற் கூறியும் அந் நெல்வயல்கள் மலைகளுக்குமேல் விளங்கு மியல்பை ஏறுதற்கமைத்த படிபோன்றிருந்த தெனத் தற்குறிப்பாக்கிக் கூறியும், மலைகளை யூடறுத்துச்செய்த குகை வழியாகப் புகைவண்டியிற்செல்வோர்க்கு அக் குகைவழி, புகும்போது இருண்டும் புக்கு வெளிப்படும்போது இருள் நீங்கியும் தோன்று மியல்பிற்கு முறையே இருள்வதையும் விடிவதையும் உவமை புணர்த்தி,

‘மலையிடைச்-செல்கைக்குரியசெய்நெறிப்புக்குழி
இருள்வதுபோன்றுநன்கிருண்டுபோகுழி
விடிவதுபோன்றுவிடிந்திலங்குவியப்பும்”

எனக் கூறியும், இயற்கையுஞ் செயற்கையும் விரவப் புனைதல் காண்க. இப் புனைந்துரைகள் ஈழத்துக் கண்டிநகர் கண்டார்க்குக் கண்டாங்கு இன்பந் தருதலின் மிக வியக்கத்தக்கனவேயாம்.

இன்னும், “செப்பெனப் பாவையெனத் திகழ்பல் லணியென” என்னுஞ் செய்யுளுள்,

“நினைத்தாங்கேகுநெஞ்சக்கல்லினர்
உருண்டநோக்கினர்இருண்டமேனியர்
உப்புப்பொரிந்திடையிலங்குறூஉமுதுகினர்
காழ்த்தீதுவரிமழுங்கித்தோற்பொரியுரிவைக்
கையினர்கயிற்றுமுடிவலையினர்நீரிடை
எல்லைகண்டாங்காங்கிடுபெயர்மரபினர்
பன்மீன்வேட்டப்பயன்சால்வளத்தினர்”

என்பன முதலாகப் பரதவரியல்பையும்,

“அதுவே, புன்னைக்குடைதரூஉம்புள்ளிநிழலசைஇச்
சினைக்கயிறுதொடுத்தநடுவுடைநீள்கோற்
புலவுநாறியுணங்கும்விழிமீன்கொள்வான்
கரந்துவருபுள்ளெலாம்விரைந்தலைத்தோட்டியும்
பாவைவனைந்துபல்லாட்டயர்ந்தும்
வளைமுதலாகியவகையினங்கொண்டு
பெயரும்வடிவும்பிறங்குறமணன்மே
லிணைத்துமகிழ்ந்தும்வண்டலிழைத்தும்”

என்பன முதலாக நெய்தனிலமகளிரியல்பையுங் கூறியும் இடையிடையே உவமை தற்குறிப்பேற்றம் முதலிய அணிகளாற் பொருளியல்புகளைப் புனைந்தும் இயற்கையும் செயற்கையும் ஒத்த வின்பந்தரக்கூறுதல்காண்க,

சிலர், பொருள்களைப் புலப்படுத்தற்காக உவமை ஆன்றோர்களால் நூல்களுள் எடுத்தாளப்பட்டதன்றி, அணிமுதலியன குறித்து எடுத்தாளப்பட்டதன்றென்பர். அவ ரறியார். உவமையைப் பயன் வினை மெய் என வகுத்துக்கூறியதனால், அணிகுறித்தென்பது பெறப்படும். உதாரணமாகக் “கண்பிறழ்ந்ததோ கயல்பிறழ்ந்ததோ” என்னுஞ் செயற்

கைப்புனைந்துரையை நோக்கும்போது கண்ணின்பிறழ்ச்சிகண்டான், கண்ணின்பிறழ்ச்சியைப்புனைந்துரைத்து இன்பமுறும்படி கயற்பிறழ்ச்சியை ஐயவுவமைவாய்பாட்டானே ‘கண்பிறழ்ந்ததோ கயல்பிறழ்ந்ததோ’ எனக் கூறினனன்றிக், கண்ணின் பிறழ்ச்சிகாணற்குக் கயலின்பிறழ்ச்சியை உவமைகூறிக் கண்டானல்லன். அன்றிப் பிறர்க்குணர்த்தக் கூறினுமல்லன். ஆதலின் இன்னோரன்னவற்றின்கண் பொருளைப் புலப்படுத்தற்கு உவமை எடுத்தாளப்பட்டதென்னுங் கூற்று அவ்வியாத்தியாதலின் அது பொருந்தா தென்பது.

இன்னும்,

“திருவளர்தாமரைசீர்திசழ்காவிகளீசர்தில்லைக்
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர்மாலையொர்வல்லியினொல்கியனநடைவாய்ந்
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே”

என்னுமிச்செய்யுளுரையிற் பேராசிரியர் “அங்ஙன மூவமித்துச்சொன்னதனாற் பயன் மகிழ்தல் என்கின்றார். ஆதலின் ஆண்டு ‘வென்றிக்கொடி’ பொருளைப் புலப்படுத்தவந்த உவமையன்றென்பது பெறுதும்.

இன்னும்,

“பாரிபாரியென்றுபலவேத்தி
யொருவற்புகழ்வர்செந்நாப்புலவர்
பாரியொருவனுமல்லன்
மாரியுமுண்டீண்டுலகுபுரப்பதுவே”

என்னுஞ் சங்கச்சான்றோர்செய்யுளை நோக்கும்போது மாரியை உவமையாகக்கூறியது பாரியின் கொடையைச் சிறப்பித்தற்கன்றித் தெரியாதார்க்குப் பாரியின் கொடையைப் புலப்படுத்தவன்றென்பது தெளியப்படுதலினாலும் அவர்கூற்றுப் போலியென்பது போதரும். இது, பொருளை இகழ்வதுபோலப் புகழ்ந்தது.

[தொடரும்.]

இங்ஙனம்,

சி. கணேசையர்.

உ

# நம்பியாண்டார் நம்பி காலம்.

[௫0௨-ம் பக்கத் தொடர்ச்சி.]

இனி முதலாவதான ஆதித்தன் என்ற பெயரை எடுத்துக்கொள்வோம். மத்தியகாலச் சோழவரசர்பரம்பரையிலே இப்பெயரையுடையவர்கள் (1) விஜயாலயன்மகன் தொண்டைநாடுபரவினவனான முதலாம் ஆதித்தன்; (2) முதலாம்பராந்தகன்மகன் இராஜாதித்தன்; (3) இவன் தம்பி சித்தத்தைச் சிவன்பாலேவைத்தவரான கண்டராதித்தர்; (4) சுந்தரசோழ பராந்தகன்மகன் ஆதித்தகரிகாலன். இவர்களே ஆதித்தன என்ற பெயரையுடையவர்கள்.

இவ்வடைவினருள் இராஜாதித்தரும் கண்டராதித்தரும் வெறும் ஆதித்தராகவில்லை ஆனால், கண்டராதித்ததேவர் தாம் பாடிய திருவிசைப்பாவிலே,

வெங்கோல்வேந்தன்றென்னாடுமீழமுங்கொண்டதிறற்
செங்கோற்சோழன்கோழிவேந்தன்செம்பியன்பொன்னணிந்த
வங்கோல்வளையார்பாடியாடுமணிதில்லையம்பலத்துள்
எங்கோனீசனெம்மிறையையென்றுகொலெய்துவதே. (அ)

என்று பாடுகிறார். இதிலே சிங்களநாடுவென்றசெய்தியும் பொன்னம்பலம் பொன்வேய்ந்தசெய்தியும் பெறப்பட்டாலும், இவர்தகப்பனான வீரசோழன், வீரநாராயணன் என்ற பட்டம்புனைந்த சோழபெருமானடிகள் முதலாம் பராந்தகதேவர் கி. பி. 947-ல் விண்ணாட்டுக்கேகினபின் மூத்தமகனான இராஜாதித்ததேவரோடு இரட்டஅரசனான கன்னரதேவன் என்ற மறுபெயரையுடைய மூன்றாம் கிருஷ்ணனும் அவனது மைத்துனனான பூதுகனும் சண்டையிட்டுத் தோற்றபின்னர் வஞ்சனையாகத் தக்கோலத்தில் அவரைக்கொன்று சோழநாட்டில் ஒருபகுதியைக் கட்டிக்கொண்டதால், அச்செய்தியையும் சுட்டியிருப்பார். அப்படிப்

பட்ட நாடிழந்த அரசனை மேலேகுறித்தபடி நம்பியாண்டார்நம்பி பாடியிருக்க இயலாது. அன்றியும், இவர் கண்டராதித்தர் என்ற பேருடையவர். பாட்டிலோ ஆதித்தன் என்றே கூறப்பட்டிருக்கிறது. ஆகவே பாட்டிற் கூறப்பட்டவர் இவராயிருக்கமுடியாது. இவரது தமையன் இராஜாதித்தன்; அடைமொழியோடு இவன் பெயர் கூறப்படுவதாலும் இவன் இரண்டொரு ஆண்டே அரசுசெலுத்தினும் பட்டாபிஷேகமின்றி இறந்ததாலும் இவனையும் கவனிக்கவேண்டுவதில்லை.

இனி ஆராயவேண்டுவது, முதலாம் ஆதித்தனையும் இரண்டாம் ஆதித்தனையுமே.

முதலாம் ஆதித்தனே சோழ இராச்சியஸ்தாபகன் என்று சொல்லவேண்டும். இவன், தகப்பனான விஜபாலயன் பிடித்த நாட்டைத் தான் காப்பாற்றியதோடு தொண்டைநாட்டிலும் பாவினவன். இவன் தோண்டைநாடு பாவினவன் என்றே தில்லைஸ்தானம் கல்வெட்டொன்றிற் சொல்லப்படுகிறது. இவனுடைய போரெல்லாம் வடநாட்டிலே நடந்தனவேயொழியத் தென்னாட்டில் நடைபெற்றதாகத் தெரியவில்லை. அன்றியும், இந்த முதலாம் ஆதித்தன் கொங்குதேசத்தை அடிப்படுத்தியதாகவும் சரித்திரம் கூறவில்லை. முதன்முதலாகக் கொங்கையடிப் படுத்தியவன் முதலாம் பராந்தகனே. இவைகளைவிட்டுக் கல்வெட்டும் செப்பேடுகளும் என்னசொல்கின்றனவென்று கவனிப்போம்.

இவனுக்கு (விஜயாலயனுக்கு)ப் பிறகு இவன் மகன், பெரியோர்க்கு ஒரு நிலையம், அறிவிற் பிரகஸ்பதி, மடியென்ப தறியான், மக்கள் துன்பத்தை நீக்குவதிலே நோக்குடையானான ஆதித்தவர்மன் அரசாண்டான்.

(திருவாலங்காட்டுச் செப்பேடு, சுலோ. 47)

கண்மூடாக் கடலின்றிரை நுனியி லிந்துதவழ வாங்கேகளிறுசிந்துங்
கன்னமதமூ மூற்றெடுத்துக் காலொடு சென்று கலக்குங் காவிரிப்புறமெலாம்
வண்ணமுற வாலயம்பல பதாகையென மணிகண்டற் கமைத்தனன் கல்லாற்
புண்ணியமே யுருவாய வொளிமகுடன் வென்றிபுனை பூர்வாதித்தனே.

(அன்பிற்செப்பேடு, சுலோ. 18)

இப்பூபாலனிடம் (விஜயாலயன்) கீர்த்திவாய்ந்த ஆதித்தன் தோன்றினன். இவன் இப்பூவுலகமுழுதும் ஜபித்தான். இவனுடைய அடிகள் மற்றையரசர்களுடைய மணிமுடியிற் பிரகாசித்தன.

(ஆனைமங்கலம்செப்பேடு, சுலோ. 13)

அவன் (விஜயாலயன்) புத்திரன் கோதண்டராமன் என்ற மறுபெயரையுடைய ஆதித்தவர்மன் மதயானைமின்மேலிருந்த பல்லவனை (அபராஜிதவர்மனை)க் கொன்றவன். (கன்னியாகுமரிக்கல்வெட்டு, சுலோ. 55)

ஆகவே இவைகளினாலே இவன் சோழநாட்டின் வடபுறத்திலேயே பல்லவர்களோடு சண்டையிட்டுத் தனது இராச்சியத்தை நிலைக்கவைப்பதிற் கண்ணுங்கருத்துமாயிருந்தானென்றேற்படுகின்றதேயொழியத் தெற்கே சென்றதாகத் தெரியவில்லை.

இனி, மற்றொரு ஆதித்தனைக் கவனிப்போம். இவன் சுந்தரசோழனென்னும் இரண்டாம்பராந்தகனுடைய மூத்தமகன். சோழர்கள் கொள்ளும் பட்டப்பெயர்ப்படி இவன் தகப்பன் இராஜகேசரியாகவே இவன் ஒரு பரகேசரி. இயற்பெயர் ஆதித்தன். முதலாம் ஆதித்தனினின்றும் இவனைப் பிரித்துக்காட்ட இவனை ஆதித்தகரிகாலன் என்பர் சரிதக்காரர். இவனது தகப்பன்காலத்திலேயே இவன் சுந்தரசோழனது அத்தைமகனும், சேனாபதியுமான பராந்தகன் சிறியவேளார் என்னும் இருங்கோவேளாரோடு சிங்களநாட்டின்மேற் படையெடுத்துச் சென்றனனென்றும், அங்கே சிங்களத்தை வென்றும் நாட்டையழித்தும் வருகையில் சேனாபதியான பராந்தகன் சிறியவேளார் இறந்தாரென்றும் கல்வெட்டுக்களில்[1] படிக்கிறோம். ஆதித்தகரிகாலன், 'பாண்டியன் றலைகொண்ட பரகேசரிவர்மர்க்குயாண்டு இரண்டு' 'வீரபாண்டியன்றலை கொண்ட பரகேசரிவர்ம்மர்க்கு யாண்டு இரண்டு' என்பதான மெய்க்கீர்த்தியைக் கூறிக்கொள்ளுகிறான். இதற்கேற்ப ஆனைமங்கலத்துச் செப்பேடும் 'இந்த மநுவம்ஸதீபமான ஆதித்தன் போரிலே வீரபாண்டியனோடு தன் வலிமையறிந்த ஒரு மத்தகஜத்தோடு இளஞ்சிங்கமொன்று

[1] 116 of 96.

விளையாடுவதுபோல விளையாடினான்' என்று கூறுகிறது. திருவாலங் காட்டுச்செப்பேடு வீரபாண்டியனை இவன் கொன்றானென்றே கூறுகிறது. ஆகவே இவன் தென்னன் நாடும் ஈழமும் செயித்தானென்பதும் 'புல மன்னியமன்னனைச் சிங்களநாடு பொடிபடுத்த - குலமன்னியவக் கோகன நாதன்' என்பதும் பெறப்பட்டது.

இவனைப்பற்றிச் செப்பேடுகள் கூறுவதைக கவனிப்போம்:—

இந்த இராஜேந்திரன் (சுந்தரசோழன்) இராஜராஜனான ஆதித்தன் என்ற சூரியவம்ச குலசேகரனைப் பெற்றான். பராந்தகதேவன் தேவலோகத்தை யாட்சிசெய்யுங்கால் ஆதித்தன் பூலோகத்தை அரசாண்டுவந்தான். இந்த மநு வம்சதீபமான ஆதித்தன் போரிலே வீரபாண்டியனோடு தன்வலிமையறிந்த ஒரு மத்தகஜத்தோடு இளஞ்சிங்கமொன்று விளையாடுவதுபோல விளையாடினான்.

(ஆனைமங்கலம் செப்பேடு. சுலோ. 26—28)

இவனுக்கு (சுந்தரசோழனுக்கு)ப் பிறகு இவன்மகன் ஆதித்தன் அரசு கட்டிலேறினான். மதனனை அழகில்வென்ற அந்த ஆதித்தன் பாண்டியனைப் போரிற் கொன்றான். அவன் தலைநகரிலே (மதுரை) ஜயஸ்தம்பம் நட்டு அதனில் பாண்டியன் தலையை நட்டுவிட்டுச் சுவர்க்கத்தைக் காணவேண்டிப் பூமியினின்றும் மறைந்தனன். (திருவாலங்காட்டுச் செப்பேடு, சுலோ. 67—68)

கன்னியாகுமரிக் கல்வெட்டில் இவனையும் இன்னும் சில அரசரையும்பற்றி யொன்றும் கூறப்படவில்லை.

ஆகவே, இவன் இராஜராஜனென்ற பெயரையுடையவனென்றும், குலசேகரன் என்ற பட்டமு முடையவனென்றும் பாண்டியனைப் போரிற் கொன்று அவன் நாட்டையும் செயித்தானென்றும் ஈழத்தை யழித்தானென்றும் அறிகிறோம். அபயன் என்ற பெயர் பலராலும் கொள்ளப் படுவதால் அதைப்பற்றிக் கவனிக்கவேண்டுவதில்லை.

இனிப் பொன்னம்பலம் பொன்வேய்ந்த செய்தியையும், சிவபெருமான் திருவடியடைந்த செய்தியையும் கவனிப்போமாயின் இவனது ஆட்சி ஐந்தாண்டுகட்குட்பட்ட கல்வெட்டுக்களே காணப்படுகின்றமையின் இவன் நம்பிஆண்டார்நம்பிகாலத்திலேயே சிவபெருமான் திருவடி

நீழலையடைந்துவிட்டானென்று கூறலாம். இவ்வாறு இவனது இறப்பும், ஈழம் கொண்ட செய்தியும், பெயர் ஒற்றுமையும் பட்டம் கொண்டதும் இவனுக்குப் பொருந்தியிருத்தலினாலே பொன்னம்பலம் பொன் வேய்ந்ததாகத் திருத்தொண்டர்திருவந்தாதிகூறும் செய்தியும் உண்மையாகவே இருக்கலாம். அதற்குற்ற புறச்சான்று இன்னும் நமக்குக் கிடைத்திலது.

ஆயினும், முதலாம்பராந்தகன் பொன்வேய்ந்ததாகக் கூறப்பட்டிருக்கிறதேயெனின் அவனுக்குப் பெயர் ஒற்றுமையே யில்லை. அவனே முதலாம்ஆதித்தன்மகனாவான். தகப்பன் பேரும் பிள்ளை பேரும் ஒன்றாக நம் நாட்டிலே ஓரிடத்தும் கேட்டோமில்லை.

இனி, கண்டராதித்ததேவரே தமது திருவிசைப்பாவில் தென்னன் நாடும் ஈழமும் கொண்ட திறல்வேந்தன் என்றும், பொன்வேய்ந்தவனென்றும் பொருள்படும்படியாகப் பாடவில்லையா? என்றாலோ திருமுறைகண்டபுராணமுடையார் இவரென்று கொண்டிருப்பாராயின் இதனைச் செவ்வையாகக் கூறியிருப்பார். திருவிசைப்பாப் பாடியவரென்றும் சுட்டுவார். அன்றியும், இவர் தம்மைக் கண்டராதித்த தேவரென்றே தமது திருவிசைப்பா 10-ம் பாட்டிற் கூறுகிறார். ஆகவே, குலசேகரனான ராஜராஜன் ஆதித்தனே நம்பியாண்டார்நம்பிகாலத்தவன் என்பது தேற்றம்.

ஆதித்தகரிகாலன் உத்தமசோழனான மதுராந்தகனுக்குமுன்னிருந்தவனானபடியால் உத்தமன் சிம்மாசனமேறிய கி. பி. 970-க்கு முன்னாண்டவனென்பது பெறப்படும். ஆகவே நம்பியாண்டார்நம்பி பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியி லிருந்தவராவ ரென்பது உறுதி.

சோமசுந்தரதேசிகன்.

---

ஃ

# மதிப்புரை.

அன்னபூர்ணாலயம்:—இது, திருவிதாங்கூர் அரசாங்கத் தலைமை மொழிபெயர்ப்பாளர், திரு. T. இராமலிங்கம்பிள்ளை எம் ஏ, அவர்களால் எழுதப்பெற்றதொரு தமிழ் நவீனம். வங்கதேசத்து நிருபமா தேவி யென்னும் ஆசிரியை வங்கபாஷையில் வரைந்துள்ள 'அன்னபூர்ண மந்திரம்' என்னும் வசனநூலின் மலையாளமொழிபெயர்ப்பைத் தழுவி இதனை யியற்றியிருப்பதாக இதன் முகவுரையால் அறியக்கிடக்கிறது. ஆங்கிலம், தமிழ், மலையாளம் ஆகிய மூன்றுமொழிகளிலும் வல்லுநராய் ஒவ்வொருமொழியிலும் பற்பல அரியநூல்களை இயற்றியுதவிய இதன் ஆசிரியரான பிள்ளையவர்களின் பேராற்றலை ஈண்டுப் பாராட்டாதிருத்தல் இயலாததாகும். நிற்க:

இந்நவீனம் மிகவும் எளியநடையில் அமைந்திருத்தலின் யாவர்க்கும் பயன்படத்தக்கதே. அலங்காரச்சுவைநிறைந்து ஆற்றலமைந்த சொற்றொடர்கள் இதன்கண் மலிந்து காணப்படுதல் பெரிதும் இன்ப மளிக்கின்றது. இதன் கதைப்போக்கு உலகநடைபிறவாது உயரிய ஒழுக்கமுடையதாய்ச் செல்வதோடு, சோகரசம் ததும்புவதாய் எத்தகைய கல்நெஞ்சினையும் கரைந்துருகச்செய்யும் இயல்புவாய்ந்து விளங்குகிறது. இந்தியமக்கள் குடிவாழ்க்கையின் இயற்கைவனப்பு இதில் நன்கு சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது. இன்றியமையாதன சில சமூகச் சீர்திருத்தங்களை வற்புறுத்துவதும் இதன் ஒருபுடை நோக்கமென்று தெரிகிறது. இதுபொழுது நம் நாட்டில் மிகுதியும் நடையாடுகின்ற ஏனைய புனைகதைகள்போலாது, இந்நவீனம் தன்னிடம் குடிகொண்டு தோன்றும் இயற்கையழகு, தூய்மை, இனிமை முதலிய சிறப்பியல்புகளால் தனது முதன்மையை நிலைநிறுத்துமென்பதில் ஐயமில்லை. இப் புத்தகத்தின்விலை,-(நூல் நிலயப்பதிப்பு) ரூ. 1—4—0; (சாதாரணப் பதிப்பு) ரூ. 1—0—0; வேண்டுவோர், ஆர். எஸ். பிள்ளை; காந்தாரியம்மன் தெரு, புத்தன்சந்தை, திருவனந்தபுரம் என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சைவசித்தாந்த பரிபாஷை:—தேவகோட்டையிற் றனவைசியப் பெருமக்களின் ஆதரவில் நடைபெற்றுவரும் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தின் பதினோராவது வெளியீடாக, சைவசித்தாந்த பரிபாஷை என்னும் ஓர் அரிய தமிழ்வசன நூல் இப்பொழுது அச்சிடப்பட்டுள்ளது. இது, சூரியசிவாசாரியரென்பா ரியற்றியதொரு வடமொழி நூலினின்று மொழிபெயர்க்கப்பெற்றதாக விளங்குகிறது. ஷை சங்கத்தின் ஸம்ஸ்கிருத பண்டிதர்கள் மொழிபெயர்த்ததை, அச்சங்கத்துச் சித்தாந்த சாத்திர போதகாசிரியரும் செந்தமிழ்ப்புலவருமான ஸ்ரீமாந். போ. முத்தையபிள்ளையவர்களைக்கொண்டு பிழைபறப் பரிசோதித்து நல்ல தமிழ்நடையில் எழுதப்பெற்ற இப்புத்தகம் சைவசித்தாந்தக் கோட்பாடுகளை யாவரும் எளிதினுணருமாறு மிகுதியும் பயனளிக்குமெனப் தொருதலை. பதி, பசு, பாச மென்னும் முப்பொருள்களின் தன்மைகளும், அவற்றின் உபயோகங்களும், அவற்றின் உண்மையுணர்த்தும் பிரமாணங்களும் ஆகிய இவற்றை இதில் மிக நுட்பமாகவும் தெளிவாகவும் இனப பயக்க எடுத்துவைத்திருப்பதாகத்தெரிகிறது. இத்தகைய புத்தகங்களை வெளியிட்டு உலகுக்குபகரித்துவரும் ஷை சங்கத்தார்மாட்டு நன்றிபாராட்டுதல் வைதிகசைவராயுள்ளாரனைவர்க்கும் இயைந்த கடமைபாகுமென்பது சொல்லவேண்டுவதில்லை. மேற்கண்ட புத்தகத்தின் விலை அணா ୨; வேண்டுவோர், 'காரியதரிசி, சிவாகம சங்கம், தேவகோட்டை' என்ற விலாசத்திற் பெறலாம்.

பரமஇச்சா ஞான தீபிகை எனும் காரியசித்தாந்தம்:—இது ஞானியார் ஸ்வீடன பர்க் லத்தீன்பாஷையில் எழுதின "வெளிப்படுத்தின விசேஷ விளக்கம்" என்னும் நூலிலிருந்து எடுத்த பரம இச்சாசக்தி, பரம ஞானசக்தி, எனும் நூலிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாக அறியப்படுகிறது. முன் 'நீயூ ரிபார்மர்' பத்திரிகையின் ஆசிரியரான மகா-ள-ள-ஸ்ரீ D கோபால் செட்டியாரவர்களே இதன் மொழிபெயர்ப்பாளராவர். பொதுவாக நூல்களை மொழிபெயர்த்தலென்பது அரிய காரியமேயெனினும், வேதாந்தவிஷயங்களை ஒரு பாஷையினின்று மற்றொன்றிற் பெயர்த்தெழுதுவதன் அருமை சொல்லுந்தரத்ததன்று. அன்றியும், மேற்றிசைக் கலைஞானத்தையும் கீழ்த்திசைக் கலைஞானத்தையும் ஒருவகையாக ஒப்பிட்டு ஆராய்ச்சிசெய்தல் மிகுந்த நற்பயனைவிளைக்குமென்று அதனை விரும்பாதார் எவருமில்லை. ஆசிரியர் செட்டியா

ரவர்களுடைய இத்தகைய முயற்சியும் போற்றற்குரியதென்பதில் ஐயமென்னை? இம்மொழிபெயர்ப்பின் தமிழ்நடை சிற்சில இடங்களில் இலக்கண முறையான திருத்தங்களை அவாவிநிற்கின்றதெனினும், பொதுவாக மிக எளிமை வாய்ந்ததாய்ப் பொருளுணர்ச்சிபெறுதற்கு ஏற்ற கருவியாகவே அமைந்துள்ளது. இதன் முதனூலாசிரியரது கோட்பாடுகள் பெரும்பாலும் சைவசித்தாந்த உண்மைகளைத் தழுவிநிற்கின்றனவென்று சொல்லப்படுதல் இங்குக் குறிப்பிடத்தக்கது. இதன் விலை ரூ 1; வேண்டுவோர் மகா-ள-ள-ஸ்ரீ D கோபாலசெட்டியாரவர்கள், ராயப்பேட்டை, சென்னை, என்ற விலாசத்திற் பெறலாம்.

ஆத்தியடி விநாயகர் நான்மணிமாலை:—இப்பிரபந்தம், திருநெல்வேலி ஜில்லா ஆற்றூர் ஸ்ரீமாந் திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்கள் குமாரரும் சங்கரன்கோவில் ஹெட் அக்கவுண்டெண்ட் உத்தியோகத்தில் அமர்ந்துள்ளவருமான திருவாளர், A T இராமலிங்கம்பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது. இதன் செய்யுட்கள் யாவும் செந்தமிழ்நலம் கனிந்து ஆற்றொழுக்கான செவ்விய நடைதழுவிச் செல்லுகின்றன. மிக எளிதுணர் வழக்குச்சொற்களே இதில் மலிந்து காணப்படுவதால் பொருளுணர்ச்சிபெறுவதிற் சிறிதேனும் இடர்ப்படுவதில்லை. எதுகை, மோனைத் தொடைகளும், சொற்பொருளாழமும், அணிநலன்களின் அமைதியும் ஆகிய இவற்றாற் குறைவின்றிச் செய்யுள்கட்கோதிய இலக்கணங்களிற் சிறிதும் வழுவாது இயன்றிருத்தலின் இச் சிறுபிரபந்தத்தை வாசிக்குந்தோறும் மகிழ்ச்சி மீதூருகின்றது. இதன் ஆசிரியராகிய பிள்ளையவர்களது தமிழ்மொழிப்புலமையும், தெய்வபக்தியின் சிறப்பும், செய்யுளியற்றும் திறமையும் ஆகிய உயர்குணங்களனைத்தும் இதன்கண் உள்ளங்கைக்கனிபோற் றெள்ளிதின் விளங்குகின்றன. விநாயகக்கடவுளது திருவருட்பேற்றால் அன்னார் எல்லாநன்மையையும் எய்தி வாழ்வாராக.

திருக்குறட்குமரேசவெண்பா:—இப்பெயர்கொண்ட அரியபெரிய நூலொன்று திரு. ஜெகவீரபாண்டியன் அவர்களால் சில ஆண்டுகளுக்குமுன்னர்த்தொடங்கப்பெற்று மாதாந்தசஞ்சிகைகளாகப்பிரசுரிக்கப்பட்டுவருவதில், இப்பொழுது அதன் நான்காந்தொகுதி முற்றுப்பெறுகின்றது. இந்நூல், சிவசிவவெண்பா, இரங்கேசவெண்பா, வடமலை

வெண்பா, சோமேசர்முதுமொழிவெண்பா முதலியவற்றைப்போல்வ தொன்றென்பதே இதன் பெயர்முகத்தான் அறியக்கிடப்பதாயினும், அவையெல்லாவற்றுள்ளும் இது மிக மிக ஏற்றமுடையதென்பதை ஈண்டைக் குரையாதிருத்தல் இயலாது. திருக்குறள்நூலின் ஒவ்வோரதிகாரத்து ஒவ்வொருகுறட்பாவைமட்டிலும் எடுத்து அவற்றிற்குமேற்கோளாக ஒவ்வொருகதையினைக் காட்டிவிடுக்கும் ஏனை நூல்கள்போலாது இக்குமரேசவெண்பா அப் பொய்யாமொழியின் ஆயிரத்து முந்நூற்று முப்பதாருங் குறள்களுக்கும் ஒவ்வோருண்மைச்சரிதநிகழ்ச்சியை மிகப் பொருட்பொருத்தமுற இணைத்து வெண்பாவை முற்றுவித்துச் செல்லுந்திறம் வியந்து பாராட்டற்பாலது. அதுவன்றியும், இந்நூலுள் பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை, கதைவிளக்கம் முதலிய இன்றியமையாத பலவகைக் குறிப்புக்களும் தக்கமேற்கோள்களுடன் இதன ஆசிரியராலேயே எழுதிச் சேர்க்கப்பெற்றிருத்தல் அன்னாது கல்விப்பரப்பையும் கட்டுரைவன்மையையும் நன்கு வெளியிடுகின்றது. பொருட்பாலிற் கொடுங்கோன்மையதிகாரமிறுதியாகவுள்ள இந்நூலின் ஓரளவு இதுகாறும் முற்றுப்பெற்றுளது; எஞ்சியபகுதியும் முட்டுப்பாடின்றி முடிவெய்துமாறு இறைவன் திருவருள்புரிக. இதன் வருடச்சந்தா ரூபா 4; பூரணசந்தா ரூபா 21. அறத்துப்பால் முழுவதும் தனிப்புத்தகமாக விலை ரூ. 8-12-0 வேண்டுவோர் மானேஜர் திருவள்ளுவர் நிலையம், தூத்துக்குடி என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்க.

மாணவர்விருந்து:—இது, பசுமலை உயர்தரபோதனமுறைக் கலாசாலைகளின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். நே ரா சுப்பிரமணிய சர்மா அவர்கள் இயற்றியதொரு செய்யுட்பாடப்புத்தகம். கரிகால சோழன் வெண்பா, பொற்கைப்பாண்டியன் வெண்பா, மனுச்சோழன் வெண்பா என்ற பெயருடன் தனித்தனியே முடிக்கப்பெற்ற மூன்று பிரபந்தங்கள் இதில் அடங்கியுள்ளன. இப்புத்தகம் தன பெயருக்கேற்ப, பள்ளிச்சிறுவர்களும் தெள்ளிதிற் பொருளறியுமாறு சிறிய செந்தமிழ்ச் செய்யுள்நடையில் இயன்றிருக்கின்றது. நாட்டுவளம் நகர்வளம இவற்றை நன்றாக வருணித்து, கற்பனை அலங்காரம முதலிய செய்யுட்குரிய நலன்களிற் சிறிதும் வழுவாது, ஆங்காங்குப் பற்பல நீதிகளையும் அரிதிற புலப்படுத்தி, சங்கநூல் வழக்குகளையும் தழுவிக்கொண்டு கதைப் போக்கினைப் பெரிதும் இன்பமுற எடுத்தமைத்துச் செல்லும் ஆசிரிய

ரவர்களது கவித்திறமை இதில் நன்குவிளங்கக் காணலாம். மாணவர்களிடையே தமிழ்ச்சுவையூட்டவிரும்பி, ஸ்ரீமாந் சர்மா அவர்கள் அருமையான பல வசனபாடங்களை இதுகாறும் எழுதியுதவினார்களாயினும், இதுபொழுது அவர்கள் இயற்றி வெளியிட்ட இச் செய்யுட்பாடப் புத்தகம் நம்மவரின் விசேட நன்குமதிப்பிற்குரியதாகு மென்பது யாவரும் அறியத்தக்கது. இதன் செய்யுட்களுக்கு இன்றியமையாத ஒரு குறிப்புரையும், கதைச்சுருக்கமும் எழுதிச் சேர்க்கப்பெற்றிருத்தல் குறிப்பிடத்தகும். இதன் விலை அணா 6, வேண்டுவோர் ஆசிரியரவாகளிடத்திலும், மதுரை புஸ்தகவியாபாரம் மகா-௱-௱-ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

திருவோத்தூர் இளமுலையம்பிகை அந்தாதி:—இது, சேயாறு போர்டுஹைஹஸ்கூல் தலைமைத்தமிழ்பபண்டிதர் கருந்திட்டைக்குடித் திருவாளர் வி. சாமிநாதபிள்ளையவர்களால் இனியநடையில் எல்லார்க்கும் பொருள்விளங்குமாறு இயற்றி ஒவ்வொருபாட்டின் கீழும் அரும்பதவுரைக்குறிப்பும் எழிதிச் சேர்த்து நல்லகாகிதத்தில் அழகாக அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதன் விலை அணா இரண்டு. இதன் விற்பனையால் வரும் ஊதியம் அம்பிகையின் ஆலயத்திருவிளக்குநிதிக்குக் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. வேண்டுவோர் வி. சாமிநாதபிள்ளையவர்கள், தலைமைத்தமிழ்ப்பண்டிதர், போர்டுஹைஹஸ்கூல், திருவத்திபுரம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

விவேகபாநு:—இஃதொரு புதிய மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற்றொகுதியிற் சில பகுதிகள் இப்பொழுது வெளிவந்துள்ளன. நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர் உள்ளிட்ட எத்தகையினரும் வாசித்து இன்புறுவதற்கு வேண்டிய பலதுறைப்பட்ட விஷயங்கள் இதில் வெளிடப்பெறுகின்றன. மகா-௱-௱ ஸ்ரீ என். கே. கோவிந்தசாமி பிள்ளை யென்பார் இதன் ஆசிரியாாவர். இதன் வருடச்சந்தா ரூ 1; வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0; தனிப்பிரதி அணா 2. வேண்டுவோர், செங்கல்வராய நாயுடு, விவேகபாநு ஆபீஸ் நிர். 20, நம்மாழ்வார் தெரு, முதல்சந்து, சௌகார்பேட்டை, சென்னை என்ற விலாசத்திற் பெற்றுக் கொள்ளலாம்.